தங்கயர் முன்னைத் கொள்ளை கொள்ளும்
தூய்த்த வைர நகைகளுக்கு



அம்பிகா ஜூவலர்ஸ்
77 செட்டியார் தெரு கொழும்பு-11.
தொலைபேசி 422839. 434238

செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6547 1990 மார்ச் 24 சனிக்கிழமை ★ ★ දිනපති

தூய்மையான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்

Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO.11.
Phone: 422839 434238

அமைச்சரவை மாற்றம்: எவரும் விலக்கப்பட மாட்டார்கள்

# புதிதாக 5 அமைச்சர்கள்

# பிரதம மந்திரி பதவியில் மாற்றமில்லை

## அடுத்தவார முடிவுக்குள் ஜனாதிபதி அறிவிப்பார்

கொழும்பு, மார்ச் 23

அடுத்த வார இறுதிக்குள் அமைச்சரவை மாற்றம் பற்றி ஜனாதிபதி அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிதாக 5 அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள். இப்போதுள்ள அமைச்சர்களில் எவரும் விலக்கப்பட மாட்டார். பிரதமர் பதவியிலும் மாற்றம் இருக்காது என்று அறிய வருகிறது.

பிரதமர் திரு டி பி விஜேதுங்க தொடர்ந்து பிரதமராகவும் நிதியமைச்சருமாகவும் பதவி வகிப்பர்- இப்போது அமைச்சர்களாக இருப்பவர்களும் தொடர்ந்து அமைச்சர்களாக பதவி வகிப்பார்கள்- சில அமைச்சர்களின் பொறுப்புகளில் மாற்றம் செய்யப்படும் என நம்பகமான தகவல்கள் மூலம் அறியக் கூடியதாக இருக்கிறது-

இப்போது ராஜாங்க அமைச்...

...தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது-

அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்பட்டதும் ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் புதிய நாடாளுமன்ற அமர்வின் போது புதிய அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொள்வார்கள்-

## வர்த்தகர் கொலை

## 3 படை அதிகாரிகள் கைது

கொழும்பு மார்ச் 23

தென் மாகாண வர்த்தகர் ஒருவர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக மூன்று இராணுவத்தினர் கைது செய்யப்பட்டனர்-

இராணுவ முகாம ஒன்றில் இருந்து பொலீஸாரால் கைது செய்யப்பட்ட இம மூவரில் ஒருவர் இராணுவ காப்டன்,ஏவார்-ஏனைய இருவரில் ஒருவர் இரண்டாம லெப்டினன்ட் மற்றவர் கோப்ரல்-

அமபலாந்தொட்டையைச் சேர்ந்த தர்மசேன ரத்னாயக்க என்ற வர்த்தகர் இவ்வாண்டு முற்பகுதியில் கொல்லப்பட்டார் சடலம பின்னர் எரிக்கப்பட்டது-

ஆனால் இவர் கொல்லப்படுவதற்கு முன்னர் மேற்படி சந்தேக நபர்கள் இவரைக் கடத்திச் சென்றிருக்க வேண்டுமென்றும 25 ஆயிரம ரூபா பணமும மற்றும நகைகளும கொள்ளையிடப்பட்டன என்றும பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்-

(ண-032)

### சோமண்ணை



எத்தனை பஸ் ஓடினாலும நெரிசல்; நெரிசல்தான் பாருங்கோ.

## இ. தொ. கா. பொன் விழா

## அட்டன் எழில்கோலம்

— க த மாறன் – வீ ஏ குறிஞ்சிபாலன் —

அட்டன், மார்ச் 23

அட்டன் மாநகர் விழாக் கோலம பூண்டுள்ளது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 30ஆவது மாநாட்டினையும், பொன் விழாவினையும ஒட்டி நகர் புதுப் பொலிவு பெற்றிருக்கிறது.

அட்டன் பிரின்சஸ் தியேட்டர் சந்தியிலிருந்து மாநாடு நடைபெறவிருக்கும டன்பார் திடல் வரை மகர தோரணங்களாலும, பதாதைகளாலும அலங்கரிக்கப்பட்டு அட்டன் மாநகர் கலகலக்கின்றது.

பிரின்சஸ் தியேட்டர் சந்தியின் நுழைவாயிலில், கவர்ச்சிகரமாக அலங்கரிக்கப்பட்ட பிரமாண்டமான பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. முகப்பில் திரு தொண்டமானினதும, ஜனாதிபதி திரு பிரேமதாசவினதும படங்கள் காட்சியளிக்கின்றன.

நகரில் இடையிடையே பதாதைகள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன.

முச்சந்திகளில் இ தொ கா தலைவரும, புடைவைக் கைத்தொழில், கிராமத் தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சருமான திரு சௌமியமூர்த்தி தொண்டமானின் பெரிய அளவிலான "கட் அவுட்"டுகளைக் காணக் கூடியதாக இருக்கிறது.

மாநாட்டையும, பொன் விழாவையும குறிக்கும தலைவர் திரு தொண்டமானின் உருவப் படங்களைக் கொண்ட சுவரொட்டிகள் தமிழ், ஆங்கிலம, சிங்களம ஆகிய மும மொழிகளிலும மூலை முடுக்கெங்கும ஒட்டப்பட்டுள்ளன. பொதுச் செயலாளர் திரு செல்லச்சாமியின் சுவரொட்டி

(2 ஆம பக்கம பார்க்க)

## தொழில் உறவு மேம்பாடு இ. தொ. கா அரிய சேவை

— ஜனாதிபதி

"இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வெற்றிக்கு அரியதோர் சின்னமாக அதன் அரசியல் சான்றாண்மைமிக்க தலைவர்களின் வழிகாட்டுதல் விளங்குகிறது. இலங்கையின் தொழிற்றுறை உறவுகளின் மேமபாட்...

இப்படி புகழாரம சூட்டியுள்ளார்.

இன்றும, நாளையும அட்ட

(2 ஆம பக்கம பார்க்க)

## பாப்பரசரின் பிரதிநிதி இன்று யாழ். விஜயம்

கோப்பாய் மார்ச் 23

பாப்பரசரின் பிரதிநிதி யாழ் ஆயரின் அழைப்பை ஏற்று இன்று 24 ஆம திகதி யாழ்ப்பாணம வருகிறார்.

வத்திக்கான் தூதுவரான பேரருள் திரு பிரான்சுவா பக்கே யாழ்ப்பாணம விஜயம செய்து மக்களுடன் தொடர்பு கொண்டு நிலைமைகளை நேரடியாக அறியவுள்ளார்.

(2 ஆம பக்கம பார்க்க)

## இந்தியப் படையினர் இன்று

## நாடாளுமன்ற கூட்டத் தொடர் கலைப்பு

கொழும்பு, மார்ச் 23

இரண்டாவது நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்தது. புதிய கூட்டத் தொடர் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி காலை 9-40 மணிக்கு ஆரம்பமாகும்.

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்து வைப்பார்.

இது தொடர்பாக ஜனாதிபதி நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு கடிதம் மூலம் அறிவித்திருப்பதாக சபாநாயகர் அல்ஹாஜ் எம் எச் முகம்மது நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

(உ-கு)

இருக்கிறது-

இப்போது ராஜாங்க அமைச்சர்களாக இருந்துவரும் ஹெரோல்ட் ஹேரத், ரூபா கருணாதிலக்க, வீரசிங்க மல்லிமாராச்சி, ஏ ஜே ரணசிங்க, தர்மதாச பண்டா ஆகிய நால்வரும் அமைச்சரவையில் இடம் வழங்கப்படும் என்றும் புதிய அமைச்சுகள் உருவாக்கப்பட்டு அப் பொறுப்புகள் இவர்களிடம் அளிக்கப்படும் என்று தெரிகிறது-

ராஜாங்க அமைச்சு பொறுப்புகளிலும் சில மாற்றங்கள் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது-

இப்போது நாடாளுமன்ற அவை முதல்வராகக் கடமையாற்றிவரும் திரு ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் இதே பதவியை வகித்து வருவார் என்று தெரிகிறது-

அமைச்சரவை மாற்றம் பற்றிய அறிவிப்பு தமிழ், சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் அறிவிக்கப்படலாம் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது- ஆனால் புதிய தகவல்களின் படி ஜனாதிபதி அடுத்தவார இறுதிக்குள் தமது அமைச்சரவை மாற்றம் பற்றித் புதிய அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொள்வார்கள்-

ஜனாதிபதி இந்த அமர்வின் போது தமது கொள்கைப் பிரகடனத்தை வெளியிடுவார்-

(உ-032)

றது. இலங்கையின் ... றுறை உறவுகளின் மேம்பாட்டுக்கு இ தொ கா அரிய தோர் சேவையினை ஆற்றியுள்ளது.

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச, இ தொ காவிற்கு

## நிட்டம்புவை படுகொலை:

## 5 சி. ஐ. டி கோஷ்டிகள் விசாரணைக்கு விரைவு

கொழும்பு மார்ச் 23

நிட்டம்புவை, வவுல்தெலே தோட்டத்தில் இடம்பெற்ற 12 பேரின் படுகொலைச் சம்பவம் பற்றி மேல் விசாரணைகளை நடத்துவதற்காக ஐந்து இரகசிய பொலீஸ் கோஷ்டியினர் நேற்று அப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என பொலீஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன-

தற்சமயம் இரகசிய பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ள மற்றும் சரணடைந்த பொலீஸ் அதிகாரிகள் வெளியிட்ட தகவல்கள் குறித்து உண்மை நிலைமைகளை ஆராய்வதற்காகவே மேற்படி ஐந்து கோஷ்டியினரும் நேற்று அப்பகுதிக்கு புறப்பட்ட

(2 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியப் படையினர் இன்று முற்றாக வெளியேறுவர்

### வழியனுப்பலில் ரஞ்சன் கலந்துகொள்வார்

கொழும்பு மார்ச் 23

இந்திய அமைதிப் படையினர் இன்று காலையோடு இலங்கையை விட்டு முற்றாக வெளியேறி விடுவர்.

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சுமார் 32 மாதங்களாக நிலை கொண்டிருந்த இந்திய அமைதிப் படையின் இறுதிக் கட்ட வெளியேற்றம் இன்றோடு முற்றுப்பெறுகிறது

இதன் பொருட்டு வெளிவிவகார அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன திருகோணமலைக்கு சென்றுள்ளார்-

இறுதியாக நாட்டை விட்டு வெளியேறும் இந்தியப் படையினரை அமைச்சரும் பாதுகாப்புப் படையினரின் உயர் அதிகாரிகளும் வழியனுப்பி வைப்பர்-

நாட்டை விட்டு வெளியேறும் இந்தியப் படை அதிகாரிகள் இன்று காலை அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்னவுக்கு திருகோணமலையில் தேநீர் விருந்தளித்து கௌரவிப்பார்கள்-

1987 ஆம் ஆண்டு இலங்கை-இந்திய சமாதான உடன்படிக்கை கைச்சாத்தானதும் இந்தியப் படையினர் இலங்கையில் தரை

(2 ஆம் பக்கம் பார்க்க)

## நிகழ்ச்சி செல்லுபடியற்றி முடிவெடுக்கும் அதிகாரம் சபைக்கே உண்டு — சபாநாயகர்

கொழும்பு மார்ச் 23

நாடாளுமன்றத்தின் எந்த ஒரு நிகழ்ச்சியும் செல்லுபடியானதா அல்லது செல்லுபடியற்றதா என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு மட்டுமே உண்டு- கடந்த 13 ஆம் திகதி பௌத்த சாசன நிதிய சட்டவரைவின் குழுநிலை விவாதத்தில் நாடாளுமன்றம் 12 மணிக்கு பின்னரும் நீடிக்கப்பட்டது சரியா அல்லது பிழையா என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு நாடாளுமன்றத்திற்கே இருக்கிறது-

நாடாளுமன்ற சபாநாயகர் அல்ஹாஜ் எம் எச் முகம்மது இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்-

பௌத்த சாசன நிதிய சட்டவரைவு மீதான குழுநிலை விவாதம் 12 மணிக்கு பின்னரும் நீடித்தது- நிலையியற் கட்டளை 7

(2 ஆம் பக்கம் பார்க்க)

## தேவநேசன் இணைப்பு அதிகாரி

திருகோணமலை மார்ச் 23

திரு தேவநேசன் நேசையா மத்திய அரசுக்கும் வடக்கு, கிழக்கு மாகாண அரசுக்குமான இணைப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்-

திரு நேசையா நேற்றுக் காலை திருகோணமலைக்கு வந்து தனது

(2 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 1500 பஸ்கள் சேவையில் ஈடுபடும்

கொழும்பு மார்ச் 23

சுமார் ஆயிரத்து ஐநூறு மேலதிக பஸ்கள் சேவை ஈடுபடுத்தப்பட உள்ளன-

இவை தமிழ், சிங்கள புத்தாண்டு பண்டிகைக்கு முன்னர் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன என்று போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு விஜேபால மெண்டிஸ் தெரிவித்திருக்கிறார்-

பஸ் பயணிகளின் சிரமங்களை நீக்கும் வகையில் மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்தும்படி ஜனாதிபதி விடுத்துள்ள பணிப்புரையின் பேரிலேயே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது-

(ண-032)

# இலங்கையர்கள் பலர் மலேஷியாவில் அனாதரவு

கொழும்பு மார்ச் 23

மலேஷியாவில் வேலை வாய்ப்பு தேடிச் சென்ற இலங்கையர்கள் பலர் அனாதரவான நிலையில் தத்தளிக்கிறார்கள்- மலேஷியாவில் இலங்கையருக்கு வேலை வாய்ப்புகள் கிடையாது- ஆகவே வேலை வாய்ப்பு தேடி இங்கு வர வேண்டாம்-

வேலை வாய்ப்புத் தேடி மலேஷியா வர உத்தேசித்திருக்கும் இலங்கையருக்கு இப்படி ஒரு அறிவிப்பை அந்நாட்டில் இருக்கும் இலங்கைத் தூதரகம் விடுத்துள்ளது-

இதே சமயம் ஜப்பானிய தூதரகமும் இதேமாதிரியான ஒரு அறிவிப்பை விடுத்திருக்கிறது-

ஜப்பானில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி சில மோசடி வேலை வாய்ப்பு முகவர் நிலையங்கள் பலரிடம் பணம் கறந்து வருவதாக கிடைத்துள்ள முறைப்பாட்டையடுத்தே அந்நாட்டுத் தூதரகம் இம் முகவர் நிலையங்களிடம் ஏமாந்துவிட வேண்டாம் என கோரிக்கை விடுத்துள்ளது-

வேலை வாய்ப்பு பெறும் பொருட்டு தாம் எவருக்கும் விஸா வழங்குவதில்லை என்றும் இதனால் மோசடிப் பேர்வழிகளிடம் பணத்தை இழந்துவிட வேண்டாம் என்றும் ஜப்பானிய தூதரகம் எச்சரிக்கை விடுத்திருக்கிறது-

(2 ஆம் பக்கம் பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல 1613

சுடர் 18 கதிர் 4442
— 1990 மார்ச் 24 —

காஷ்மீர் நெருக்கடி

# பாக். உடன் பேச்சு இந்தியா நிராகரிப்பு

## டில்லி விமான நிலையத்தில் வி. பி. சிங் பிரஸ்தாபம்

புதுடில்லி, மார்ச் 23

**காஷ்மீர் நெருக்கடி தீர்வுக்கு பாகிஸ்தானுடன் பேச்சு வார்த்தை நடத்தத் தேவையில்லையென இந்தியா நிராகரித்திருக்கிறது. இந்தியப் பிரதமர் விஸ்வநாத் பிரதாப் சிங் வியாழனன்று இது பற்றித் தெரிவித்தார்.**

நமீபிய சுதந்திரக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்ட இந்தியப் பிரதமர் நாடு திரும்பியதும் பத்திரிகையாளர்கள் விமான நிலையத்தில் அவரைப் பேட்டி கண்டனர்.

அவ்வேளையிலேயே அவர் இந்திய—பாக் பேச்சுவார்த்தைகளை நிராகரித்து கருத்து வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது—

காஷ்மீர் மக்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினால் பிரச்சினை தீர்ந்து விடுமென நாம் கருதுகிறோம். நெருக்கடியைத் தீர்க்க ஏனையோருடன் பேச வேண்டிய அவசியமில்லை.

இது விடயத்தில் பகிரங்கமாகவே நாம் செயல்பட்டு வந்திருக்கிறோம். எமது சக்தியையும் விரயமாக்கியிருக்கிறோம்.

இன்றைய சூழ்நிலையில் பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோவைச் சந்தித்து நடத்தும் பேச்சுவார்த்தைகள் பலனளிக்கப் போவதில்லை என நாம் கருதுகிறோம்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் கூறினார். (எ)

## நிகழ்ச்சி செல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இற்கு முரணானது எனவே இந்த நேரத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பை ரத்துச் செய்ய வேண்டும். சபைச் செயற்பாடுகளில் ஒரு பகுதியாக இதனை கருத முடியாது.

இப்படி ஆளும் கட்சி சபை முதல்வரும், கைத்தொழில் அமைச்சருமான திரு ரணில் விக்கிரமசிங்கா ஆட்சேபணை தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து 13 ஆம் திகதி சபையில் சர்ச்சைகள் ஏற்பட்டன. நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாத சபாநாயகர் தீர்ப்பை பின்னர் வழங்குவதாக அறிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் இதற்கான தீர்ப்பை வழங்கிய போதே சபாநாயகர் மேற்கண்ட

பெறுவது இந்த சபையின் பல வருட நடைமுறையாக இருந்து வந்துள்ளது. அன்றைய தினத்தில் எதிர்ப்பு ஏதும் இன்றி இடம்பெற்ற வற்றைத் தவிர ஏனைய நிகழ்ச்சிகள் 7 ஆவது நிலையியற் கட்டளைக்கு விரோதமானது.

இது தொடர்பாக பிரித்தானிய பிரசுரங்கள் சபையின் நடைமுறை பின்வருமாறு கூறுகிறது.

சபைச் செயற்பாடொன்று தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போது ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட கால எல்லை வந்தால் (எதிர்ப்பில்லாமல் இருந்தால்) சபை செயற்பாடுகளில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு விட்டது. 12-45 மணிவரை சபை அமர்வுகள் தொடர்ந்தன.

பிற்பகல் 1-30 மணிக்கு குழு நிலையில் பரிசீலனை மீண்டும்

## இலங்கையர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜப்பானில் தொழில் பெற்றுத் தருவதோடு விஸாவுக்கும் வழி செய்வதாகக் கூறி கண்டி, பலாங்தளை, குருநாகல், கொழும்பு உட்பட மேலும் பல இடங்களில் இம்மோசடிப் பேர்வழிகள் பெரும் தொகைப் பணத்தை மக்களிடம் கறந்து வருகின்றனராம்.

இதே சமயம் தொழில் பெறும் பொருட்டு நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் மலேஷியாவுக்கு வந்து போக்கிடம் இல்லா

## இ. தொ. கா. பொன் விழா

தோட்டத் தொழில் துறை வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியொன்று இன்றும் நாளையும் அட்டனில் நடைபெறுகிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனது பொன் விழாவையும், 30ஆவது பேராளர் மாநாட்டையும் ஒருங்கே நடத்துவதையே இங்கு குறிப்பிடுகிறோம்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மலையகத்தின் பழம் பெரும் தொழிற்சங்கம். மிகப் பலம் வாய்ந்தது.

ஒரு தொழிற்சங்கத்துக்கு அது இயங்கிய காலத்தால் அன்றி, அதன் சாதனைகளாலேயே உண்மையான பெருமை சேர்கிறது.

இந்த வகையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொன் விழாக் கொண்டாடுவது பொருத்தமானதும் அர்த்த புஷ்டியுள்ளதுமாகும்.

இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டத்தின் மூலம் இந்திய வம்சாவளி மக்கள் நாடற்றவர்களாக்கப்பட்ட பின்னர், பிரஜா உரிமைக்கு விண்ணப்பிப்பதில்லை என்று 40 வருடங்களுக்கு முன்னர் 1949இல் அட்டனில் நடந்த மாநாட்டில்தான் தீர்மானிக்கப்பட்டது.

இன்று நாடற்றவர்கள் எல்லோரும் சுயமாகவே இலங்கைப் பிரஜைகளாகி விட்ட பூரிப்பில் அதே அட்டனில் கூடுகிறார்கள்.

## தொழில் உறவு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னில் நடைபெறும் இ தொ காவின் 30ஆவது மாநாட்டினையும், பொன் விழாவினையும் முன்னிட்டு ஜனாதிபதி வாழ்த்துச் செய்தி ஒன்றினை அனுப்பி வைத்திருக்கிறார். அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது—

சமுதாயத்துக்கு நன்மை பயக்கும் நல்ல நெறிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கும், தோட்டத் தொழிலாளர்களுக்கு நலமான வாழ்வினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் இக்காங்கிரஸ் பெரும் தொண்டாற்றி வருகிறது.

இன்று 30ஆவது ஈராண்டுச் சம்மேளனத்தை வெகு விமரிசையாக நடத்துகின்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு என் அன்பான பாராட்டுதல்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இச்சம்மேளனம் குறிப்பாகத் தோட்டத் தொழிலாளர்களுக்கும், பொதுவாகத் தொழிலாளர் வர்க்கத்தினருக்கும் 50 ஆண்டுகளாக ஆற்றி வந்த சேவையினை உலகறியச் செய்யும் சிறப்புமிக்க வைபவமாகும்.

இடையறாது சேவை புரிந்து வந்த அமைப்பொன்றின் ஐம்பதாண்டு பூர்த்தியானது ஒரு மாபெரும் சாதனையாகும். அது சம்பந்தப்பட்ட அமைப்பினது பக்காக்கத் திறனையும், உந்து சக்தியினையும், உறுப்பினர்களின் நலன் காக்கும் திறனையும் எடுத்துக் காட்டுகிறது.

இச்சிறப்பு மிக்க நாளிலே எனது அருமைத் தோழரும், அமைச்சரவை சக உறுப்பினருமான திரு எஸ் தொண்டமானினதும், அவருடைய திறமைமிக்க உதவியாளரும், காங்கிரஸின் பொதுச் செயலாளருமான போக்குவரத்து ராஜாங்க

தலைப் பெறுகின்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப் பீடத்துக்கு எனது அன்பான ஆசிகளைத் தெரிவிக்கின்றேன்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 30ஆவது ஈராண்டு சம்மேளனம் வெற்றிகள் பல கண்டு இனிது நிறைவேற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

இப்படி ஜனாதிபதி தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கிறார். (ண—ங)

## 9 கிலோ தங்கம் கடத்தல் முறியடிப்பு

திருச்சி, மார்ச் 23

35 லட்சம் ரூபா பெறுமதியான 9 கிலோ எடையுள்ள தங்கக் கட்டிகளை திருச்சி விமான நிலைய சுங்க அதிகாரிகள் நேற்று முன்தினம் கைப்பற்றினர்.

கொழும்பில் இருந்து திருச்சி விமான நிலையத்தில் வந்திறங்கிய விமானப் பயணி ஒருவரிடமிருந்தே சுங்க அதிகாரிகள் இவற்றைக் கைப்பற்றினர்.

பிரஸ்தாப விமானப் பயணி தனது வானொலிப் பெட்டியின் உட்பாகத்திலேயே இந்த தங்கக் கட்டிகளை மறைத்து வைத்திருந்தார் என திருச்சி விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இச்செய்தியை அகில இந்திய வானொலி நேற்று ஒலிபரப்பியது. (ண—வ)

## ராஜ்ய சபைக்கு போட்டியின்றி பலர் தெரிவு

## இ. தொ. கா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களும் காணப்படுகின்றன.

இ தொ காவைப் பொறுத்த வரையில் இந்த மாநாடு வரலாற்று சிறப்புமிக்கதாகும். 40 ஆண்டுக்குப் பின்னர் அதாவது 1949ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த மாநாடு அட்டன் மாநகரில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

அன்று நடந்த மாநாட்டில் மலையக தமிழ் மக்கள் நாட்டுரிமையையும், குடியுரிமையையும் இழந்தவர்களாக இருந்தனர். 1948ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசு குடியுரிமையை இழக்கச் செய்தது.

அன்றைய மாநாட்டில் குடியுரிமை இழப்புக்கு கடுமையான கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்தது. அன்று தொடங்கிய போராட்டத்திற்கு 1938இல்தான் விடிவு பிறந்தது.

எந்த ஐ தே க அரசு குடியுரிமையைப் பறித்ததோ அதே அரசு மீண்டும் நாட்டுரிமையையும், குடியுரிமையையும் வழங்கியது.

இந்த பூரிப்பில்தான் மாநாடு அட்டனில் நடைபெறுகிறது. அத்தோடு மாநாட்டில் ஐ தே க தலைவரும், ஜனாதிபதியுமான திரு ஆர் பிரேமதாச சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

நாட்டுரிமையையும், குடியுரிமையும் பெற்ற மகிழ்ச்சியில் மலையக மக்கள் இந்த மாநாட்டில் பூரிப்போடு கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

அம்புகாமம் பிரதேச சபைத் தலைவரும், இ தொ கா தொழிலுறவு இயக்குநரும், மாநாட்டு வரவேற்புக் குழு இணைச் செயலாளருமான திரு எஸ் ரெங்கநாதன் இப்படி விவரித்தார்.

இன்று காலை 10 மணிக்கு திரு தொண்டமான் டன்பார் திடலில் சங்கக் கொடியை ஏற்றி வைப்பார். 11-30 மணிக்கு ஸ்ரீமாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் வழிபாடு.

11-45 மணிக்கு பேராளர் மாநாடு. பிற்பகல் இடைவேளைக்குப் பின்னர் 2-30 மணி முதல் இரவு 9 மணி வரை பேராளர் மாநாடு நடைபெறும்.

பேராளர் மாநாடு அட்டன் இந்து மகா சபை மண்டபத்தில் நடைபெறும். தொடர்ந்து 9 மணியிலிருந்து கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

25ஆம் திகதி ஞாயிறு காலை 8 மணிக்கு அட்டன் பிரின்சஸ் தியேட்டர் சந்தியிலிருந்து ஊர்வலம், டன்பார் திடலை நோக்கிப் புறப்படும்.

ஊர்வலத்தில் இ தொ காவின் 50 ஆண்டு சாதனைகளை நினைவூட்டும் வகையில், ஊர்திகள் செல்லும். ஆயிரம் இளைஞர்களும், ஆயிரம் யுவதிகளும் அணிவகுப்பில் கலந்து கொள்வர்.

மகளிர் தினத்தைச் சிறப்பிக்கும் வகையில் இ தொ கா வரலாற்றில் முதன் முறையாக வரவேற்புக் குழுவுக்கு ஒரு யுவதி தலைமை வகிக்கிறார்.

மஸ்கெலியா மவுசாக்கொல்லைத் தோட்டத்தைச் சேர்ந்த செல்வி செந்தமிழ்ச் செல்வி வரவேற்புரை நிகழ்த்து

எல்லோரும் சுயமாகவே இலங்கைப் பிரஜைகளாகி விட்ட பூரிப்பில் அதே அட்டனில் கூடுகிறார்கள்.

எந்த ஐ தே க அரசு அன்று பிரஜா உரிமையைப் பறித்ததோ அதே ஐ தே க அரசிடமிருந்து இன்று பிரஜா உரிமை பெறப்பட்டு விட்டது.

நாடற்றவர்களை இலங்கைப் பிரஜைகளாக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இப்போதுதான் முதன் முறையாக இ தொ காவின் மாநாடு நடைபெறுகிறது.

இந்த மாநாடு இ தொ காவின் முந்திய மாநாடுகளுக்கு எல்லாம் வித்தியாசமானது. முன்னர் எல்லாம் கோரிக்கைகள்தாம் முன்வைக்கப்பட்டன. இமமுறை மாநாட்டில் பிரஜா உரிமையும் வாக்குரிமையும் பெற்ற மலையக மக்களின் எதிர்கால சுபீட்சத்திற்கான செயற்திட்டங்கள் உருவாக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நாற்பது ஆண்டுகளாக அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் ஒதுக்கப்பட்டும் வந்த மலையக மக்கள் இப்போது தேசிய நீரோட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்று விட்டார்கள்.

தோட்டத் தொழிலாளர் பிரதிநிதிகள் இன்று பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபைகள், மாகாண சபைகள் ஆகியவற்றிலும் நாடாளுமன்றத்திலும் இருக்கிறார்கள். அமைச்சர்களாகவும் பதவி வகிக்கிறார்கள்.

3000 பேர் ஆசிரியர் நியமனம் பெறுகிறார்கள். 96 பேர் கிராம சேவகர்களாகினார்கள். 2700 பேர் பொலீஸ் சேவையில் இடம்பெறுகிறார்கள்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரஜா உரிமை, வாக்குரிமை, பொலீஸ் நியமனங்கள் முதலானவையெல்லாம் கிடைக்கும் என்று முன்னர் எவரும் எதிர்பார்த்ததில்லை.

தீர்ப்பை பின்னர் வழங்குவதாக அறிவித்தார்–

நேற்று நாடாளுமன்றத்தில் இதற்கான தீர்ப்பை வழங்கிய போதே சபாநாயகர் மேற்கண்டவாறு சொன்னார்– மேலும் அவர் தெரிவித்ததாவது–

இந்த சபை குறிப்பிட்ட நேரத்திற்கு அப்பாலும் அனைவரினதும் சம்மதத்துடன் (எதிர்ப்பில்லாமல் இருக்கின்ற போது) நடை

## பஸ் விபத்து 44 பேர் மரணம்

லுஸாக்கா, மார்ச் 24

ஸாம்பியாவில் உள்ள லுஹன்வாவில் பஸ் ஒன்று குடை சாய்ந்து விபத்திற்குள்ளாகியதில் 44 பேர் உயிரிழந்தனர்.

லுஸாக்காவில் இருந்து சுமார் 400 கிலோ மீட்டர் தொலைவிலேயே இந்த விபத்து நிகழ்ந்தது. (ண–எ)

இவற்றையெல்லாம் பெறுவதற்கு முன்னின்று போராடி வெற்றி கண்டவர் இ தொ கா தலைவரும், கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் புடைவைக் கைத்தொழில் அமைச்சருமான திரு எஸ் தொண்டமான் ஆவர்.

ஆயுதம் ஏந்தாமல் அகிம்சை வழி நின்று பேச்சுவார்த்தை நடத்தி எதையும் சாதிக்கலாம் என்று அவர் காட்டியிருக்கிறார்.

அடுத்து, சட்டப்படி கிடைத்த உரிமைகளை தோட்டத் தொழிலாளர்கள் நடைமுறையில் அனுபவிக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும். அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழி செய்ய வேண்டும். அவர்களுக்கு குடியிருப்பு, காணி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இவற்றிற்கான திட்டங்கள் இன்றும் நாளையும் அட்டன் மாநாட்டில் ஆராயப்படும் என்று நம்புகிறோம்.

பெறாமல் இருந்தால்) சபை செயற்பாடுகளில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு விட்டது– 12–45 மணிவரை சபை அமர்வுகள் தொடர்ந்தன–

பிற்பகல் 1–30 மணிக்கு குழு நிலையில் பரிசீலனை மீண்டும் ஆரம்பமானது 7 ஆவது சரத்து நிறைவேற்றப்பட்டதும் அடுத்த நாளுக்கென குழுநிலை அமர்வுகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டன–

இந்த நிகழ்வுகளின் போதெல்லாம் எந்தவொரு தருணத்திலும் ஆட்சேபனை தெரிவிக்கப்படவில்லை–

நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளை செல்லுபடியற்றதாக்குவதற்கான அத்தியாவசிய அதிகாரங்களை சபாநாயகர் எமது நிலையியற் கட்டளையின் கீழ் கொண்டு வந்திருக்கிறாரா என்பதே அடுத்ததாக எழும் கேள்வி நிலையியற் கட்டளைகள் 136–146 ஆகியன அவசியமான அதிகாரத்தை சபாநாயகருக்கு கொடுப்பதாக குறிப்பிட்டுள்ளது–

பொதுவான அதிகாரத்தையும் எஞ்சிய அதிகாரங்களையும் வழங்கும் இந்த இரு நிலையியற் கட்டளைகள் தொடரும்–

பௌத்த சாசன நிதியம் தொடர்பான சட்டவரைவின் இரண்டாம் வாசிப்பு மீது 12 மணிய கட்டளைகளும் எனது அபிப்பிராயத்தில் நாடாளுமன்றத்தின் நிகழ்வுகளை செல்லுபடியற்றவையாக்கி பிரகடனம் செய்வதற்கான விசேட அதிகாரத்தை சபாநாயகருக்கு வழங்கவில்லை–

சர்ச்சைக்குரியதாக இருக்கும் சபை செயற்பாடுகள் கடந்த கால நடைமுறைக்கு இசைவானதாக இருப்பினும் 7 ஆவது நிலையியற் கட்டளைக்கு ஒத்ததாக அமைய வில்லை என்பதே எனது தீர்ப்பு–

நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளை நிலை நிறுத்தும் அதிகாரத்தை நாடாளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் சபாநாயகருக்கு வழங்கவில்லை–

நாடாளுமன்றத்தின் எந்தவொரு செயற்பாட்டையும் அலுவலையும் செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு மாத்திரமே இருக்கிறது–

இப்படி அவர் கூறினார்–

(ண–கு)

இதே சமயம் தொழில் பெறும் பொருட்டு நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் மலேஷியாவுக்கு வந்து போக்கிடம் இல்லாமல் தத்தளித்துக் கொண்டிருப்பதாக அந்நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது–

இவர்களில் சிலர் கடவுச்சீட்டு, விமான பயண டிக்கெட் மற்றும் பணம், ஆகியவற்றை இழந்த நிலையில் இலங்கைத் தூதரகத்தில் அடைக்கலம் புகுந்துள்ளனர்–

இதைத் தொடர்ந்து வெளிவிவகார அமைச்சு வேலை வாய்ப்புத் தேடி மலேஷியா வந்துள்ள இலங்கையர்களின் உறவினர்களுடன் தொடர்பு கொண்டுள்ளது– சம்பந்தப்பட்ட முகவர் நிலையங்களுடன் தொடர்பு கொண்டு அவர்களைத் திருப்பி அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு வெளிவிவகார அமைச்சு மேற்படி உறவினர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது–

மலேஷியாவில் இலங்கையருக்கு வேலை வாய்ப்பு இல்லை என்றும் முகவர் நிலையங்களிடம் ஏமாந்துவிட வேண்டாம் என்றும் மலேஷியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் தெளிவாக அறிவித்துள்ளது– (ண–03:)

மான திரு எஸ் தொண்டமானினதும், அவருடைய திறமைமிக்க உதவியாளரும், காங்கிரஸின் பொதுச் செயலாளருமான போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் திரு எம் எஸ் செல்லச்சாமியினதும் சீரிய வழிகாட்டு

## 5 சி. ஐ. டி...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

னர்–

இதேவேளை கைது செய்யப்பட்டுள்ள பொலீஸ் அதிகாரிகளை பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் எதிர்வரும் திங்கட்கிழமை கும்புறுபிட்டிய நீதிமன்றத்தில் ஆஜர் செய்த பின்னர் விளக்கமறியலில் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று இரகசிய பொலீஸாருக்கு பொறுப்பான பிரதி பொலீஸ் மா அதிபர் திரு அமரசேன ராஜபக்ஷ தெரிவித்தார்–

அதன் பின்னரே சந்தேக நபர்கள் குறித்து அடையாள அணி வகுப்பு நடத்தப்படும் என்று தெரியவருகிறது–

இந்த படுகொலைச் சம்பவம் தொடர்பாக இரகசிய பொலீஸார் பெரும் எண்ணிக்கையானோரிடம் இருந்து வாக்கு மூலங்களை பெற்றிருக்கின்றனர்–

(ண–வ)

# அமைச்சர் மன்சூர் இன்று குருநாகல் விஜயம்

கொழும்பு மார்ச் 23

வர்த்தக கப்பற்துறை அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூர் இன்று (24 ஆம திகதி) சனிக்கிழமை குருநாகல், கண்டி, கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்கிறார்–

இன்று காலை 9–00 மணிக்கு குருநாகல் ஜும்மா பள்ளிவாசலிலும், பகல் 12–00 மணிக்கு கண்டி மீராமக்காம் பள்ளிவாசலிலும் பிற்பகல் 5 மணிக்கு கேகாலை ஜும்மா பள்ளிவாசலிலும் நடைபெறும் சமய வைபவங்களில் அமைச்சர் மன்சூர் கலந்து கொள்வார்–

சவூதி அரேபிய மன்னரினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பேரீச்சம்பழங்களையும் அமைச்சர் மன்சூர் தனது விஜயத்தின் போது இப்பகுதி பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர் சபைகளிடம் கையளிப்பார்.

இதன்படி குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த 80 பள்ளிவாசல்களுக்கும், கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த 70 பள்ளிவாசல்களுக்கும் கேகாலையில் 20 பள்ளிவாசல்களுக்கும் இன்றைய தினம் பேரீச்சம்பழம் பகிர்ந்தளிக்கப்படும்–

(இ–வ)

## ராஜ்ய சபைக்கு போட்டியின்றி பலர் தெரிவு

கொழும்பு மார்ச் 23

இந்திய ராஜ்ய சபைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் தேர்தலில் மேலும் பலர் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்–

தமிழ் நாட்டிலிருந்து ஆறுபேர் இவ்வாறு போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்– திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களான திரு வை கோபால சுவாமி, திரு தே தே வீரப்பன், திரு ஆர் கணேஷன், திரு ஆர் லக்ஷ்மன், ஜனாப் முஹம்மட் காஸிம் ஆகியோரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக வேட்பாளர் திரு தே மாதவனும் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்

இதேவேளை ராஜஸ்தான், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் இருந்தும் பலர் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர் என்று அகில இந்திய வானொலி நேற்று செய்தி ஒலிபரப்பியது–

(ண–வ)

## தேவநேசன்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

கடமைகளைப் பொறுப்பேற்றார்–

இவர் முன்னாள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபராவார்–

(உ–வ–288)

## பாப்பரசரின்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

பாப்பரசரின் பிரதிநிதி பேரருள் திரு பிரான்சுவா பக்க அவர்களை வரவேற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 26 ஆம திகதி யாழ் மறை மாவட்ட மக்களால் பாப்பரசரின் பிரதிநிதிக்கு யாழ் ஆயர் வணபிதா தியோகுப்பிள்ளை தலைமையில் மாபெரும் வரவேற்பு உபசாரம் யாழ் நகரில் அளிக்கப்படவுள்ளது.

(இ–142)

முறையாக வரவேற்புக் குழுவுக்கு ஒரு யுவதி தலைமை வகிக்கிறார்.

மஸ்கெலியா மவுசாக்கொல்லைத் தோட்டத்தைச் சேர்ந்த செல்வி செந்தமிழ்ச் செல்வி வரவேற்புரை நிகழ்த்துவார்.

தலைமையுரையை திரு தொண்டமான் நிகழ்த்துவார்.

பொதுச் செயலாளரும், போக்குவரத்து ராஜாங்க அமைச்சருமான திரு எம் எஸ் செல்லச்சாமி இவரைத் தொடர்ந்து உரையாற்றுவார்.

10–55 மணியிலிருந்து 11–55 மணி வரை சுமார் ஒரு மணித்தியாலம் ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச சிறப்புரை நிகழ்த்துவார்.

இந்து கலாசார ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜ் உரையாற்றிய பின்னர், நிதிச் செயலாளர் தேசபந்து வி அண்ணாமலை நன்றியுரையாற்றுவார்.

முடிவுரையை திரு தொண்டமான் பிற்பகல் 1–40 மணிக்கு நிகழ்த்துவார்.

மாநாட்டினையொட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விசேட போக்குவரத்துச் சேவைகளும் இடம் பெறும்.

பெண்கள் தங்குவதற்கு இந்து மகா சபை மண்டபம் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. அண்கள் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் தங்குவர்.

சுகாதார வைத்திய சேவைகளும் இடம்பெறும். அட்டன் நகர கடைகள் இரவு பகலாக 3 நாட்களுக்குத் திறந்து வைக்க வர்த்தகர்கள் முடிவு செய்திருக்கின்றனர்.

(ண–ங–083)

## இந்தியப் படை...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

யிறங்கினர்–

இந்தியப் படையினர் இலங்கையை விட்டு எந்தவித பிரச்சினையுமின்றி வெளியேறியதைத் தொடர்ந்த நாளை 25 ஆம திகதி நாடெங்கும் சமய வைபவங்கள் நடத்தப்பட வேண்டும் என்று கல்வி கலாசார அலுவற்துறை அமைச்சர் கேட்டிருக்கிறார்–

(ண–032)

# ஜெமினிகணேசனின் மகள் ரேகா இரகசிய திருமணம்



முகேஷ் அகர்வால்



ரேகா



ஜெமினி கணேசன்

ஹிந்தி நடிகை ரேகா டெல்லி தொழில் அதிபர் முகேஷுடன் ரகசிய திருமணம் செய்து கொண்டது பற்றி பரபரப்பான தகவல்கள் வெளியாகி உள்ளன,

நடிகர் ஜெமினிகணேசனின் மகளும ஹிந்தி முன்னணி நடிகையுமான ரேகாவும டெல்லி தொழில் அதிபர் முகேஷ் அகர்வாலும சமபத்தில் ரகசியமாகத் திருமணம செயது கொணடனர்.

நடிகை ரேகா ஹிந்தியில் முன்னணி நடிகர்களுடன் ஜோடியாக நடித்துள்ளார். லட்சக்கணக்கான ரசிகர்களின் கனவுக்கன்னியாகவும அவர் விளங்குகிறார்.

அவரது திருமணம பற்றி ஏற்கனவே பல கிசுகிசுக்கள் வெளியாயின.

பிரபல நடிகர் அமிதாப்பச்சனுடன் கூட இவரை இணைத்து கிசுகிசுக்கள் கிளமபின.

ஹிந்தி நடிகர் வினோத் மெஹராவுடன் சிறிது காலம குடும்பம நடத்திவிட்டு பிரிந்தார்.

தற்போது ரேகா டெல்லி தொழில் அதிபர் முகேஷ் அகர்வாலுடன் திருமணம செய்து கொண்டது பலருக்கு வியப்பையும அதிர்ச்சியையும அளித்து உள்ளது.

100க்கும மேற்பட்ட படங்களில் நடித்துள்ள ரேகா கோடிக்கணக்கான சொத்துக்கு அதிபராக விளங்குகிறார்.

ரேகா - முகேஷ் திருமணம பற்றி ரேகாவின் தந்தை நடிகர் ஜெமினிகணேசனிடம கேட்டபோது "அது பற்றி எனக்கு ஒன்றும தெரியாது" என்று கூறினார்.

அதைப்போல் மணமகன் முகேஷ் அகர்வால் குடும்பத்தினருக்கும திடீர் திருமணம நடக்க விருந்த செய்தி இரண்டு மூன்று நாட்களுக்கு முன்புதான் தெரிய வந்துள்ளது.

இவர்கள் திருமணம பகிரங்கமாக அறிவிக்கப்பட்டிருந்தால் இடையூறுகள் ஏற்படும என்று ரேகா முகேஷ் காதல் திருமணம ரகசியமாக பமபாயில் நடைபெற்றது.

திருமணம முடிந்த கையுடன் டெல்லி வந்த ரேகா முகேஷ் தமபதிகள் மணமகன் முகேஷின் பெற்றோரைச் சந்தித்து ஆசிர்வாதம பெற்றனர்.

பின்னர் உடனடியாக ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி தேனிலவுக்கு லண்டன் புறப்பட்டுச் சென்றார்கள்.

ரேகாவைத் திடீர் திருமணம செய்து கொண்ட தொழில் அதிபர் முகேஷ் டெல்லி சதாரா பகுதியில் 1970 ஆம ஆண்டில் சைக்கிள் விளக்கு தயாரித்து வந்தார்.

பின்னர் வேகமாக முன்னேறி பெரிய தொழில் அதிபராக உயர்ந்தார். தற்போது டெலிவிஷன் மற்றும எலக்ட்ரானிக் பொருட்களைப் பெரும அளவில் தயாரித்து வருகிறார்.

இந்தத் தொழில் மூலமாக திரையுலகில் அவருக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

தனது 30ஆவது வயதிலேயே அவர் பெரிய தொழில் அதிபராக விளங்குகிறார்.

இது அவருக்கு கிடைத்த முதல் வெற்றியாகும. தற்போது பிரபல நடிகையாக விளங்கிய ரேகாவை அவர் திருமணம செய்து கொண்டிருப்பது அவருக்குக் கிடைத்த இரண்டாவது வெற்றி என்று டில்லியில் பேசப்படுகிறது.

(இ—10)



"வசந்தம் வந்தாச்சு"

# வட மேல் மாகாணம்: 57 பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டன

நாத்தாண்டி மார்ச் 22

வட மேல் மாகாணத்தில் 57 பாடசாலைகள் மாதிரிப் பாடசாலைகளாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன—

வட மேல் மாகாண சபையின் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இப் பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டன—

இப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் புதிய வகுப்பறைகள் கட்டுவதற்காக 73 லட்சத்து 3 ஆயிரத்து 125 ரூபா செலவாகியுள்ளது— இந்நிதியை கடந்த வருடத்தில் வட மேல் மாகாண சபை செலவிட்டுள்ளது—

இதன் மூலம புதிய 125 வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன—

இத் திட்டத்தின் மூலம பெரும எண்ணிக்கையான மாணவர்களுக்கு இடவசதி கிடைத்துள்ளன எனவே இனிமேல் இப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் இட நெருக்கடி ஏற்படாது எனக் கூறப்படுகிறது—

(இ—225)

## 4 கால்களுடைய கோழிக் குஞ்சு

பண்டத்தரிப்பு செட்டிகுறிச்சி என்ற இடத்திலுள்ள கோழி ஒன்று நான்கு கால்களையுடைய கோழிக் குஞ்சு ஒன்றை பொரித்து உள்ளது

திருமதி செல்வரத்தினமமா வைத்தியநாதன் என்பவரின வீட்டில் இந்த கோழி வளர்ந்து வந்துள்ளது—

இந்த அதிசய நான்கு கால்களையுடைய கோழிக் குஞ்சை கடந்த வாரம பொரித்துள்ளது இக் கோழிக் குஞ்சை அதிகமான மக்கள் நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றனர்—

இக் கோழிக் குஞ்சு ஆரோக்கியமாகவும காணப்படுகிறது—

(இ—101)

## கொறட்டுவையில் பள்ளிவாசல்

வெலிகாமம மார்ச் 22

வெலிகாமம கொறட்டுவ பிரதேச முஸ்லிமகளின் வேண்டுகோளைத் தொடர்ந்து வெலிகாமம முஸ்லிமகள் கொறட்டுவ பிரதேசத்தில் புதிய பள்ளிவாசல் (குர்ஆன் மத்ரஸா உட்பட) ஒன்றை நிறுவி வருகின்றனர்—

"மஸ்ஜிதுஸ் ஸலாம" என்ற பெயரில் நிறுவப்பட்டுவரும இப் புதிய பள்ளிவாசலின் வேலைகளுக்கு 6 லட்சம ரூபா செலவாகும என மதிப்பிடப்பட்டுள்ளது

(இ—331)



## சேர் அப்துல் அமீருக்கு உபசாரம்

சேர்பட்டம வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ள டொமினிக்கன் தூதுவர் அல்ஹாஜ் அப்துல் டபிள்யூ எம அமீருக்கு, இலங்கையிலுள்ள கவுன்சிலர்கள் அண்மையில் ரமடா ஹோட்டலில் உபசாரம அளித்தனர்.

சேர் அல்ஹாஜ் அப்துல் டபிள்யூ எம அமீர் கவுன்சிலர்கள் உடன் படத்தில் காணப்படுகிறார்.

(இ—007)

## வெலிகாமத்தில் தொலைபேசி சேவை சீர்கேடு

வெலிகாமம மார்ச் 22

வெலிகாமம பிரதேசத்தில் தொலைபேசிச் சேவைகள் சீர்கேடு அடைந்து உள்ளன இதன் காரணமாக சுமார் [illegible] இப் [illegible] யைச் சீரடையச் செய்ய வேண்டும—

இவ்வாறு பொது மக்கள் சமபந்தப்பட்டவர்களை கேட்டுக் கொள்கின்றனர்—

## பருத்தித்துறை நகரம் ந[illegible]மயமாகும

கோப்பாய் மார்ச் 22

பருத்தித்துறை நகரம நகரப புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நவீன மயமாக்கப்படவுள்ளது,

இதற்கான நிதியை கனேடிய அரசாங்கம புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சிக்கு ஊடாக வழங்கியுள்ளது.

அண்மைக் காலச் சமபவங்களினால் சேதமாக்கப்பட்ட நகரம கனடா அரசாங்கத்தின் [illegible] முழுமையாக மறுசீரமைக்கப்பட்டு நவீனமயமாக்கப்படவுள்ளது.

நகரத்தை நவீனமயமாக்குவதற்கான நடவடிக்கைகள் ஆரமபிக்கப்பட்டுள்ளன, அதற்குரிய ஏற்பாடுகளை நகர சபை செயலாளர் திரு எஸ் சண்முகநாதன் மேற்கொண்டுள்ளார்.

வீதிகள் விஸ்தீரணமாக்கல் வேலைகளுக்கு 136 லட்சம ரூபாவும பஸ் நிலைய அபிவிருத்துக்கு 63 லட்சம ரூபாவும மலசலகூடம மற்றும பொது

ஜெமினிகணேசனிடம கேட்ட போத "அது பற்றி எனக்கு ஒன் றும தொியாது" என்று கூறி னார்.

## "வசந்தம் வந்தாச்சு"

சீமாட்டி சினிஙக்ஸ் நிறுவனத் தினர் "வசந்தம வந்தாச்சு" என்ற பெயரில் ஒரு படம தயா ரிக்கிறார்கள்.

இதில் விஜசக்ரவர்த்தி, மோகனகுமார், செந்தில், வசந்த் யுவஸ்ரீ, மனோரமா, எம என் ராஜம மற்றும பலர் நடிக்கி றார்கள்.

மாரியூர் குமரேசன் கதை, திரைக்கதை வசனம எழுதி டைரக்ட் செய்கிறார்.

ஒளிப்பதிவு ஜி தியாகராஜன். இத ஒரு குறுகிய காலத் தயா ரிப்பு ஆகும.

(இ-10)




போட்டி என்று வந்து விட டால் (பெண்களிடமிருந்து) நாணம என்பத நழுவி விடுமோ? அத்தோடு மனசுக்குள் தொண் டாட்டம ஏற்பட்டுள்ளதை உணர்த்தத்தான் இந்த ஆட்டமோ? (சத்யராஜ்—கௌதமி) (படம- வாழ்க்கை சக்காம)

(இ-10)

# சித்தாராவுக்கு "புது வசந்தம்"

## வழங்க 4 இளைஞர்கள் முயற்சி



சித்தாரா

5 அடுக்கு மாளிகையின் மேல் மாடி-

அந்த மாடியின் ஒரு மூலை யில் உள்ள சிற தகர கொட்ட கைகளில் அழகான ஒரு இளம பெண்ணை அன்புடன் ஆதரித்த அவள் இதயத்தில் படிந்திருந்த சோகத்தை அகற்ற 4 இளைஞர் கள் முயன்று கொண்டிருந்தனர்-

அழகு பெண்ணாக சித்தாரா நடிக்க 4 இளைஞர்களாக முரளி, ஆனந்தபாபு, ராஜா, சார்லி நடித்தனர்-

இந்தக் காட்சி சூப்பர் குட் பிலிமஸ் "புத வசந்தம" என்ற படத்துக்காக படமானது-

"புத வசந்தம" படத்தில் முரளி சித்தாராவுடன் கௌரவ வேடமேற்ற நடிக்கிறார், சுரேஷ், விஜசக்ரவர்த்தி, ஆர் பி விஸ்வம, குமரிமுத்து, விஜய சந் திரிகா மற்றும பலர் நடிக்கிறார் கள்-

வேகமாக வளர்ந்த வரும "புத வசந்தம" படத்தின் பாடல் களை வாலி, முத்துலிஙகம, எஸ் ஏ ராஜ்குமார் எழுதகிறார் கள்- ஒளிப்பதிவு- ஹரிபாபு- எஸ் ஏ ராஜ்குமார் இசை அமை க்கும இந்தப் படத்தில் 7 பாடல் கள் இடம்பெறகின்றன-

விக்கிரமன் கதை, திரைக்கதை வசனம எழுதி டைரக்ட் செய் கிறார்- இவர் வெற்றி பெற்ற "புதிய பாதை" படத்தில் துணை டைரக்டராக பணி புரிந்தவர்-

(ந-10)

தினபதி
சினிமா

# சேவை சீர்கேடு

வெலிகாமம மார்ச் 22

வெலிகாமம பிரதேசத்தில் தொலைபேசிச் சேவைகள் சீர்கேடு அடைந்து உள்ளன இதன் காரணமாக சுமார் நான்கு மாத காலமாக இப் பிரதேச மக்கள் பெரிதும பாதிப்புக்குள்ளாகி வருகின் றனர்

அவசர பாதகாப்பு நடவடிக் கைகளைத் திடீரென மேற்கொள் வதற்குப் பொலீஸ் நிலையத்து டன் தொடர்பு கொள்வதும மேற்படி தொலைபேசிச் சீர் கேட்டால் பெரிதும பாதிக்கப் பட்டு இருக்கிறது-

இது சமபந்தமாக அரச நிறுவனஙகளும பொத மக்களும சமபந்தப்பட்ட அதிகாரிகளுக் குப் பலமுறை புகார் செய்தனர்

ஆயினும இத தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கைக ளும மேற்கொள்ளப்படவில்லை என பொத மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்-

வெலிகாமம அரச நிறுவனஙக ளினதும பொத மக்களினதும நலன் கருதி வெலிகாமம பிர தேசத்தில் தொலைபேசிச் சேவை யைச் சீரடையச் செய்ய வேண் டும-

இவ்வாற பொத மக்கள் சமபந்தப்பட்டவர்களை கேட் டுக் கொள்கின்றனர்-

(இ-331)

# அபிவிருத்திக்கு பல்தேசியகம்பனிகள்தேவை

## —மன்சூர்

கொழும்பு மார்ச் 23

நாட்டை அபிவிருத்தி செய்ய பல்தேசியக் கமபனிகள் தேவை-

வர்த்தக கப்பற்றுறை அமைச் சர் ஜனாப் ஏ ஆர் மன்சூர் இவ்வாற கூறினார்-

புலமைச் சொத்துச் சட்டக் கோவை திருத்தச் சட்டவரைவு விவாதத்தில் அவர் தொடர்ந்து கூறியதாவது:-

பல்தேசியக் கமபனிகள் எஙக ளுக்குத் தேவை- நாட்டை அபிவிருத்தி செய்ய இததான் வழி யாக இருக்கும-

இந்த நாட்டில் உள்ள கலை ஞர்களின் நிலை தொடர்பாக நான் மிகவும கவலைப்படுகிறேன் அவர்களின் நலன் பேணப்பட வேண்டும-

இதற்கு ஜனாதிபதி தேவை ஏற்படின் பல திருத்தஙகளைக் கொண்டு வருவார்-

இப்படியான சட்டஙகள் இல் லாதவிட்டால் எமது தொழில் நுட்பஙகளை வளர்ச்சியடையச் செய்ய முடியாது-

ஆணைக் குழுவில் அஙகம வகிப்பதற்குக் கூட கலைஞர்க ளுக்கு இடமளிக்கப்படும அர சாஙகம இதற்கு உரிய நடவ டிக்கை எடுக்கும-

இவ்வாற அமைச்சர் மன்சூர் பேசினார்-

(இ-கு)

டத்தின் கீழ் நவீன மய மாக்கப்படவுள்ளது,

இதற்கான நிதியை கனேடிய அரசாஙகம புனர்வாழ்வு புனர மைப்பு அமைச்சிக்கு ஊடாக வழஙகியுள்ளது.

அண்மைக் காலச் சமபவஙக ளினால் சேதமாக்கப்பட்ட நகரம குனடா அரசாஙகத்தின் நிதி உதவியுடன் முழுமையாக வதற்கான நடவடிக்கைகள் ஆரமபிக்கப்பட்டுள்ளன, அதற் குாய ஏறபாடுகளை நகர சபை செயலாளர் திரு எஸ் சண்முக நாதன் மேற்கொண்டுள்ளார்.

வீ தி க ள் விஸ்திரண மாக்கல் வேலைகளுக்கு 136 லட் சம ரூபாவும பஸ் நிலைய அபிவி ருத்துக்கு 63 லட்சம ரூபாவும மலசலகூடம மற்றும பொது வசதிகளுக்கு 1½ லட்சம ரூபா வும கட்டிடஙகள் மற்றும வசதி குளை நிர்மாணித்தலுக்கு 251 லட் சம ரூபாவும,

மின்சார அபிவிருத்தி வேலை களுக்கு 63 லட்சம ரூபாவும, நவீன மார்க்கட் திருத்திஅமைத் தல் வேலைகளுக்கு 108 லட்சம ரூபாவும,

பொத நூலக அமைப்புக்கு 19 லட்சம ரூபாவும கிளை நூல கஙகளின் அமைப்பு வேலைக களுக்கு 8 லட்சம ரூபாவும,

நகரசபை அலுவலக அமைப் பிற்கு 15 லட்சம ரூபாவும நக ரத்தின் திறந்த வெளிக் கலைய ரஙகத்தின் திருத்த வேலைக ளுக்கு 3 லட்சம ரூபாவும பயன்படுத்தப்படவுள்ளது,

இந்த நிதியைக் கொண்டு நகரப் புனரமைப்பு வேலைகள் இந்த வருடம முடிவதற்குள் பூர்த்தியாக்கத் தீர்மானிக்குப் பட்டுள்ளது.

(இ-142)

# வடபகுதியிலுள்ள நீதிமன்றங்கள் விரைவில் இயங்கும்

வவுனியா மார்ச் 22

வடபகுதியில் உள்ள நீதி மன்றஙகள் மீண்டும விரை வில் இயஙகவுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளத.

அடுத்த வார முற்பகுதியில் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொளும பொருட்டும நீதி யமைச்சு அதிகாரிகள் குழு ஒன் று வடபகுதிக்கு விஜயம செய்ய உள்ளது-

இஙகு அண்மைக்கால அசம பாவிதஙகளில் சேதமடைந்த நீதிமன்ற கட்டிடஙகளையும இக்குழு பார்வையிடும.

இவற்றை உடனடியாக புனரமைப்புச் செய்து இயஙகச் செய்வதற்கு இக்குழு தேவை யான சிபார்சுகளைச் செய்யும என்றும தெரிவிக்கப்படுகிறத.

(இ-101)

# மலையக பொலீஸார் பாதுகாப்பு பணியில்

இன்று 24 ஆம, 25 ஆம திகதிகளில் அட்டன் நகரில் இ தொ காவின் பொன் விழா நடைபெறுகிறது-

இலஙகைப் பொலீஸ் சேவை யில் புதிதாக சேர்த்துக் கொள் ளப்பட்ட 124 மலையக பொலீ ஸார் முதல் தடவையாக இஙகு பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்-

இத் தகவலை மத்திய மாகாண சபை உறுப்பினரும, இ தொ கா பொன் விழா வர வேற்புக் குழு இணைச் செயலா ளருமான திரு அண்ணாமலை கதிரேசன் தெரிவித்தார்-

திரு கதிரேசன் மேலும கூறிய தாவது—

நுவரெலியா பிராந்தியத்தில் இருந்து அண்மையில் பொலீஸ் படைக்கு மலையக இளைஞர் களுள் பதினொரு சப் இன்ஸ் பெக்டர்களும, 113 பொலீஸ் கான்ஸ்டபிள்களும சேர்த்துக் கொள்ளப்பட்டனர்-

கடந்த 20 ஆம திகதி இவர் கள் தமது மூன்ற மாத கால பொலீஸ் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறினர்-

இவர்கள் அட்டன் பிராந்திய பொலீஸ் நிலைய பொறுப்பதி காரி, உதவிப் பொலீஸ் அதிகாரி ஆகியோரின் தலைமையின் கீழ் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவர்-

(எ-096)

# "தௌஹீத்"? "ஷிர்க்"? "குப்ரியத்"?

* அல்லாஹ் எங்கும் நிறைந்தவன் என்பது அடிப்படையென்றால்;
* சிருஷ்டி கர்த்தாவை சிருட்டிகளிலிருந்து பிரிக்கலாமா?
* சிருஷ்டி இன்னுமொரு சிருஷ்டியை பணிதல் ஷிர்க்காகுமா?
* ஓதிப் படித்த உலமாக்களே தெளிவு பெற உதவுங்கள்—

இணையேற்படுத்தல் என்ற ஒரு தவறான கொள்கையை மறுத்து உண்மையான கொள்கையை உலகுக்கு உணர்த்தவே "லா இலாஹ இல்லல்லாஹ்" என்ற தௌஹீத்கலிமா இறைவனால் நபிமார்கள் வாயிலாக எமக்கு அருளப்பட்டுள்ளது.

இதனை மறுத்துரைப்பார் யாருமில்லை— ஆனால் இப்புனித கலிமாவினால் உணர்த்தப்படும் உண்மைக் கருத்தில் தான் கருத்து வேற்றுமையும் மாறுபட்ட அபிப்பிராயமும் ஏற்பட்டுள்ளது.

உலமாக்களில் ஒரு சாரார் நாயகத் தன்மையில் (உலூஹிய்யத்தில்) ஒருமைப்படுத்தல் என்கின்றனர்—

மற்றுமொரு சாரார் வணக்கத்தில் (இபாதத்தில்) ஒருமைப்படுத்தல் என்கின்றனர்—

இன்னோர் சாரார் அல்லாஹ்வுடன் அவனை விட்டும் வேறான சிருஷ்டிகளை எந்த விடயத்திலும் கூட்டாக்காமலிருப்பதே என்கின்றனர்—

இம்மூன்று வகையான அபிப்பிராயங்களும் தான் இன்றுள்ள உலமாக்களில் பெரும்பாலானோர் கூறும் கூற்றாகும்—

ஆனால் குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ் ஆகிய விதிகளுக்கமைய சிந்திக்கும் போது இவ்வபிப்பிராயங்கள் உண்மைத் தௌஹீதுக்கு முற்றிலும் முரணான வெறும் கற்பனையேயாகும்—

எனினும் உண்மையை உணர்ந்த அவ்லியாக்களான உலமாக்கள் மேற்கூறிய கற்பனை விளக்கங்களை மறுத்து உண்மையான தௌஹீது என்றால் என்ன? என்பதனை குர்ஆன், ஹதீஸ், ஆதாரங்களுடன் மிகத் தெளிவாக விளக்கம் தரத் தவறவில்லை—

அவ்விளக்கங்களை ஒவ்வொன்றாய் ஆராய்ந்து தெளிவடைவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்—

அன்பின் முஸ்லிம் சகோதரர்களே!

அகில இலங்கை ஜமய்யத்துல் உலமா சபை என்னை ஒரு முர்தத் (மதம் மாறியவன்) என தீர்ப்பளித்தது எல்லாரும் அறிந்ததே!

நானும் எனது குடும்பமும் என்னைச் சேர்ந்தோரும் இதனால் பெரிதும் புண்பட்டிருக்கிறோம்—

இருப்பினும் கூட என்னை ஒரு "முஷ்ரிக்" (இணைவைப்பவன்) என உலமாக்கள் தீர்ப்புத் தராததையிட்டு சந்தோஷப்படுகிறேன்—

அவர்களுக்கு நன்றியும் கூறுகிறேன். காரணம் ஒரு முர்தத்தை அல்லாஹ் மன்னிக்கலாம்— முஷ்ரிக்கை அவன் மன்னிக்கவே மாட்டான்— கலிமாவுக்கு நான் கூறும் பொருள் பிழையென்றால் என்னைத் திருத்துவது உலமாக்களின் கடமை

மாறாக ஒரு விசாரணை கூட இல்லாமல் என்னையவர்கள் மதம் மாறியவன் என்று பொறுப்பற்ற முறையில் சொல்லியிருப்பது சரியானதா?

அதுவும் நானே கண்டித்துள்ள மௌலவி அப்துல் றவூப் அவர்களுக்கு எதிராக எழுதிய தீர்ப்பையே எனக்கும் எதிராக உபயோகித்திருப்பது முறையாகுமா?

இந்த விளக்கங்களை அடிக்கடி இன்ஷா அல்லாஹ் எழுப்பிக் கொண்டிருப்பதே எனது இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்—

ஒரு தனி மனிதனான எனது சிந்தனைகள் பிழையானது என்றால் ஜமஇய்யதுல் உலமாவின் கடமை என்னைத் திருத்துவதல்லவா?

"உன்னைத் திருத்தவும் மாட்டோம் விசாரிக்கவும் மாட்டோம்" என்ற அடிப்படையில் சர்வாதிகாரப் போக்கில் ஜமஇய்யதுல் உலமா நடக்கக் கூடாதல்லவா?

முஸ்லிம் சமூகம் எனும் நீதிமன்றம் மாத்திரமே எனக்கு நியாயம் வழங்கக் கூடிய இடமாகும்—

எனவேதான் எனது பேனா முஸ்லிம் சமூகத்தின் மனசாட்சியிடம் முறையிடுகிறது—

## கற்பனைக் கருத்துக்களில் முதலாவது: நாயகத் தன்மையில் (உலூஹிய்யத்தில்) ஒருமைப்படுத்தல்

நாயகத் தன்மையில் ஒருமைப்படுத்தல் என்றால் அல்லாஹ்தான் நாயன் என்றும் இந்த நாயகத் தன்மையில் எதையுமே, எவனையுமே கூட்டாக்காமலிருப்பது என்று கூறுகின்றனர்—

அ இ ஜ உலமா சபையினரும் இக்கருத்தை உடையவர்கள்தான் இக் கொள்கை அல்குர்ஆன், அல் ஹதீஸின் கருத்துக்களுக்கு முற்றிலும் முரணானது மட்டுமன்றி சுத்த ஷிர்க்குமாகும்—

வழித்தோன்றல்கள்தான்— சிலை வணக்கத்தைக் கொண்டவர்கள் சிலையை வணங்கியதற்காக முஷ்ரிக்குகள் என்று அழைக்கப்படவில்லை—

"இச்சிலைகளை நாங்கள் அல்லாஹ்வாகக் கருதவில்லை— இவைகள் அல்லாஹ்விடம் சேருவதற்கு வசீலாவாக அமையும் என்று கருதியே இவைகளை நாங்கள் வணங்குகிறோம்" என்று முஷ்ரிக்கீன்கள் கூறும் கூற்றை அல்லாஹ்வே திருமறை மூலம் உறுதிப்படுத்துகிறான்—

ஆலிஹத்துகள் (விக்கிரகங்கள்) எங்களை அல்லாஹ்வுடன் நெருங்கிச் சேர்ப்பதற்காகவே அன்றி (அவைகளை) நாங்கள் வணங்குவதில்லை (அல்குர்ஆன் 39—3)—

இக்கருத்துக்களை விளங்கிக் கொள்ள ஹிதாயத் இல்லாதவர்கள் பொய்யையும், புரட்டையும் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றனர்—

எனவே அல்குர்ஆன் கூறும் ஆழமான கருத்துக்களை நோக்கும் போது "நாயகத்தன்மையில் ஒன்று படுத்தல்" எனும் கருத்து சுத்த ஷிர்க்கேயன்றி உண்மைத் தௌஹீத் அல்ல என்பது நன்கு புலனாகின்றது—

## கற்பனைக் கருத்துக்களில் இரண்டாவது வணக்கத்தில் (இபாதத்தில்) ஒருமைப்படுத்தல்

அதாவது அல்லாஹ்வைத் தவிர வேறொன்றை வணக்கத்திற்குப் பாத்திரமானது என்று கருதாமல் அல்லாஹ்வே வணக்கத்திற்குப் பாத்திரமானவன் என்று கருதுவதும், "வணக்கத்

வும் ஷிர்க்கையே உறுதிப்படுத்துகிறது—

எனினும் உண்மை விளங்காத சில உலமாக்கள் அல்லாஹ் என்பது வாஜிபான மௌஜூது என்றும் பிரபஞ்சங்கள் மும்கினான மௌஜூத் என்றும் விளக்கம் தருகின்றனர்—

ஆனால் வாஜிபாக இருந்தாலும், மும்கினாக இருந்தாலும் மௌஜூது என்ற வகையில் வாஜிபும் மும்கினும் இருப்பதாகவேதான் கொள்ளப்படும் என்ற தத்துவமும், உண்மை நிலையும் புரியாமல்தான் ஏதேதோ கூறி பாமர மக்களை பாதாளத்தை நோக்கி பயணம் அனுப்புகின்றனர். அந்தோ பரிதாபம்—

**M. S. M. அப்துல்லாஹ்**

(பயில்வான்)

எனவே மேலே சுட்டிக்காட்டிய கருத்துக்கள் அனைத்தும் அறியாமையினாலும் குர்ஆன், ஹதீஸ் கூறும் உண்மைகளை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவமும், அல்லாஹ்வின் ஹிதாயத்தும் இல்லாமையினாலும் ஏற்பட்ட வெறும் கற்பனைக் கனவுகள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை—

## "ஷிர்க்" இணை ஏற்படுத்துதல் என்றால் என்ன?

...கள் என்பது தென்படுகிறது—

இவ்வடிப்படைக் கொள்கைகளில் ஒன்று "ஷிர்க்" இணை கற்பித்தல் என்பது— இதில் பல கிளைகள் இருக்கின்றன— மற்றொன்று "தௌஹீது" என்பது—

இதை ஏகமாக்கல் என்று கூறுவோம்— இதற்கு எவ்வித கிளைகளுமே கிடையாது— ஆயினும் மனிதர்கள் இதில் பல இடைச் செருகல்களைப் புகுத்திப் பல கிளைகளை உருவாக்கியிருக்கிறார்கள்—

உலகிலுள்ள பாபம், பசி, பிணி, துன்பங்களுக்கெல்லாம் ஆணிவேராய் அமைந்திருப்பது இணையேற்படுத்தல் என்ற ஷிர்க்குத்தான் மனிதன் வரம்பு மீறிப் பாபம் செய்தால் அது மன்னிக்கப்படலாம் என்றும் ஷிர்க்கென்ற இணையேற்படுத்தலுக்கு மன்னிப்புக் கிடையாதென்றும் குர்ஆன் ஹதீஸுகள் விபரம் தருகின்றன—

இதைப்போல உலகிலுள்ள நன்மைகளுக்கெல்லாம் மூலகாரணமாய்த் தன் நிறைவு பெறும் உபாயமாய் அமைந்திருப்பது ஏகமாக்கல் என்ற தௌஹீதேயாகும்—

ஆயினும் இந்த் தௌஹீது பலவகையாய்த் திரிபுபடுத்தப்பட்டிருப்பதால் இதைக் கொண்டு பெரும்பாலார் தன்நிறைவு பெற முடியாதவர்களாகவே தென்படுகிறார்கள்—

இவ்வுலக மக்கள் யாவரும் தன்நிறைவு பெற்று வாழ்வதற்கு வழிகாட்டுவதற்காகவே இறைவன் 1,24,000 நபிமார்களையும் ஸுஹ்புகள், வேதங்கள், முஃஜிஸாத் (அற்புதம்) களையும் அருளினான்—

இறுதியில் றஸூல் (ஸல்) அவர்கள் பல யுத்தங்களையே செய்து தன்நிறைவு பெறும் வழியான தௌஹீதை நிலைப்படுத்தினார்கள்—

ஆயினும் அது அடிக்கடி புரட்டப்பட்டுக் கொண்டேயிருக்கிறது—

காலாகாலம் தோன்றிய ஒரு சிலரால் இவ்வுண்மை உணர்த்தப்பட்ட போதெல்லாம் ஒரு சில பிற்போக்குவாதிகளால் சித்திரவதை செய்யப்பட்டார்கள்— கொன்றொழிக்கப்பட்டார்கள்—

ஷிர்க், தௌஹீது ஆகிய இரு கொள்கைகளையும் அவற்றால் ஏற்படும் நன்மை, தீமைகளையும் பொறுமையோடு விளங்கித் தெளிவு பெற்று எம வாழ்வைச் சீர்படுத்தி இம்மை மறுமைகளின் நற்பேறுகளைப் பெற வேண்டியது ஒவ்வோர் மனிதனுக்கும் கட்டாய கடமையாகிறது—

ஆதலால் (ஷிர்க்) இணையேற்படுத்தல் என்றால் என்ன? என்பதை முதலில் கண்டறிவோம்—

குர்ஆன் ஹதீஸுகளைப் பக்கச் சார்பற்ற தெளிந்த அறிவோடு நோக்கினால் ஷிர்க் என்பதற்கு 5 கிளைக்காரணங்களும் ஒரு மூலகாரணமும் இருப்பது தென்படுகிறது—

இவற்றைக் குர்ஆனைக் கொண்டே நோக்குவோம்— இந்த 6 காரணங்களில்—

ஆதம் (அலை) அவர்கள் ஓர் சிருட்டிப் பொருள்தானென்பதில் எமக்குச் சந்தேகமில்லை—

ஸுஜூது செய்த மலக்குகளும் சிருட்டிகளே என்பதிலும் எமக்குச் சந்தேகமே இல்லை— இந்த ஸுஜூதில் ஈடுபட்டவர்களை குர்ஆன் ஹதீஸுகளில் எவ்விடத்திலும் முஷ்ரிக்கீன்கள் (இணை ஏற்படுத்துவோர்) என்று கூறப்படவே இல்லை—

இந்த ஸுஜூதில் ஈடுபடாத (மறுத்த) இப்லீஸைத்தான் அல்லாஹ் லஃனத்துச் செய்திருக்கிறான். இவ்விபரத்தை எமக்கறிவிக்கிற அதே குர்ஆன் யூசுபு (அலை) அவர்களை ஒருசிலர் ஸுஜூது செய்தார்களென்று அறிவிக்கிறது—

இம்மக்களை முஷ்ரிக்குகள் என்று எங்கேயும் கூறப்படவில்லை—

மேலும் யாஃகூபு (அலை) அவர்களையும் சிலர் ஸுஜூது செய்ததாகக் குர்ஆன் கூறுகிறது— இந்த மக்களையும் எங்கேயும் முஷ்ரிக்குகள் என்று கூறப்படவே இல்லை—

விக்கிரகங்களான இலாஹுகளுக்கும் ஆதம் (அலை) யூசுப் (அலை) யஃகூபு (அலை) போன்றோருக்கும் பேதமுண்டு என்று யாராவது கூறினால் அது அறியாமையாகும்—

ஏனென்றால் சிருட்டியென்ற அடிப்படையில் ஒன்றுக்கு மற்றொன்று பேதமேற்படக் காரணமே கிடையாது—

சிருட்டிகள் மண், தண்ணீர், காற்று, நெருப்பு, ஆகாயம் போன்ற மூலக்கூறுகளின் செயற்கைதான். மூலக்கூறுகளில் விகிதாசார வேறுபாடு இருக்கலாம்—

ஆயினும் இயங்கும் பொருளேயாயினும் இயங்காப் பொருளேயாயினும் சிருட்டியென்ற அடிப்படையில் யாவும் சிருட்டிகள்தான்—

ஆதம் (அலை) யூசுப் (அலை) யஃகூபு (அலை) போன்றவர்களும் அவர்களை ஸுஜூது செய்தவர்களும், விக்கிரகமான இலாஹுகளும் அவற்றைச் ஸுஜூது செய்தவர்களும் சிருட்டிகள் தான்—

இச்செயல் ஷிர்க்குக்குரிய மூலகாரணமாய் இருந்திருந்தால் இறைவனே இதைச் செய்யும்படி ஏவியிருக்க மாட்டான். ஸுஜூது செய்யாத இப்லீஸை லஃனத்துச் செய்திருக்கவும் மாட்டான்—

இவ்விடத்தில் எமக்குப் பல சந்தேகங்கள் தோன்றுகின்றன—

சிருட்டியை சிருட்டி வணங்குதல் ஷிர்க்கிற்கு முக்கிய காரணமல்லவென்றால், அல்லாஹ்வும் றஸூல்மார் நபிமார்களும் விக்கிரக வணக்கத்தை ஏன் தடை செய்தார்கள்?

இப்றாஹீம் (அலை) விக்கிரகங்களை ஏன் உடைத்தெறிந்தார்கள்? றஸூல் (ஸல்) மக்காவை வெற்றி கொண்டபோது கஃபாவுக்குள்ளிருந்த

அல் ஹதீஸின் கருத்துக்களுக்கு முற்றிலும் முரணானது மட்டுமன்றி சுத்த ஷிர்க்குமாகும்–

இதுவே முஷ்ரிகீன்களின் கொள்கையுமாகும்– ஆச்சரியப்பட வேண்டாம்– சிந்தனையைத் தெளிவுபடுத்திக் கொண்டு அல்–குர்ஆனைப் புரட்டுங்கள்–

மேகத்திலிருந்து மழையை வருஷிக்கச் செய்பவனும், அதனைக் கொண்டு இறந்த பூமியை உயிர்ப்பிப்பவனும் யார் என்று (நபியே) நீர் (முஷ்ரிக்கீன்களான) அவர்களைக் கேட்பீராயின் நிச்சயமாக அல்லாஹ்தான் என்று அவர்கள் பதில் கூறுவார்கள்– (அல்குர்ஆன் 29—63) இவ்வாயத்தைப் போன்று (23–86, 87) (49–9) (31—25) (29—61) போன்ற ஆயத்துக்களையும் புரட்டிப் பாருங்கள்–

இவ்வாயத்தின்படி அல்லாஹ் ஒருவன் இருக்கிறான், அவன்தான் மழையை இறக்குகிறான், அவன்தான் புற்பூண்டுகளை முளைக்கச் செய்கிறான் அவன்தான் எல்லாவற்றையும் நன்கு அறிந்தவன் என்று ஏற்றுக் கொண்டிருந்த மக்கத்து மக்களுக்கு அல்லாஹ்வால் சூட்டப்பட்ட பெயர் "முஷ்ரிகீன்கள்" என்பது நன்கு தெளிவாகிறதல்லவா!

அல்லாஹ்வே நாயன் என்றறிவதுதான் உண்மைத் தௌஹீது என்று வெறும் கற்பனைவாதிகள் கூறுவது சரியென்றால் அல்லாஹ் நாயன் அல்ல என்று கொள்வதுதானே ஷிர்க்காக முடியும்–

இப்படிக் கருதுபவனைத்தானே முஷ்ரிக் என்று அழைக்க வேண்டும்– ஆனால் அல்லாஹ்வோ தன்னை நாயன் என்று ஏற்றுக் கொண்ட மக்களையல்லவா முஷ்ரிக் என்றழைக்கின்றான்–

அ இ ஜ உலமா சபையினர் கூறுவதைப் போன்று சிலை வணக்கத்தை அவர்கள் மேற்கொண்டதற்காகத்தான் முஷ்ரிக் என்ற பட்டம் சூட்டப்பட்டார்கள் என்பது உண்மையானால் சிலை வணக்கம் தோன்றியதே நபி நூஹ் (அலை) அவர்களுடைய காலத்தில்தானே!

அப்படியானால் நபி ஆதம் (அலை) அவர்கள் தொடக்கம் நூஹ் (அலை) அவர்கள் காலம் வரை வாழ்ந்த மக்கள் எந்தச் சிலையையும் வணங்கவில்லையே!

அப்படியானால் அவர்களை ஏன் முஷ்ரிக்குகள் என்று அல்லாஹ் அழைக்க வேண்டும்? என்பதனை சிந்திக்கத் தவறியதினால்தான் அதிகமானோர் பிழையான கருத்தையே சரியானதாகக் கற்பனை பண்ணியுள்ளனர்–

அ இ ஜ உலமா சபையினர் கூட இவ் வேறொன்றை வணக்கத்திற்குப் பாத்திரமானது என்று கருதாமல் அல்லாஹ்வே வணக்கத்திற்குப் பாத்திரமானவன் என்று கருதுவதும், "வணக்கத்திற்குப் பாத்திரமானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை" என்று கலிமாவுக்குக் கருத்துக் கொள்வதுமாகும்–

குர்ஆன் ஹதீஸைக் கொண்டு ஆராயுமிடத்து இக்கொள்கையும் வெறும் கற்பனை யூகமேயன்றி உண்மையல்ல என்ற உண்மை தெளிவாகிறது–

இதற்கும் ஆதாரமாக முன்பு காட்டிய (39—3) என்ற ஆயத்தையே கொள்ளுவோம்– முன்பு நாம் விளங்கிக் கொண்டது போல் அவர்கள் விக்கிரகங்களை அல்லாஹ் என்று நினைக்கவுமில்லை– அப்படி நினைத்து வணங்கவுமில்லை என்பதும் உறுதியாகுவதுடன் விக்கிரகங்கள் அல்லாஹ்விடத்தில் சேர்த்து வைக்கும் என்ற நிலைப்பாட்டில்தான் அவைகளை வணங்கினார்கள் என்ற உண்மையும் நன்கு தெளிவாகிறது–

இவ்வடிப்படையில் அல்லாஹ்வை வணக்கத்தில் (இபாதத்தில்) ஒருமைப்படுத்தியவர்களுக்கு அல்லாஹ்வால் சூட்டப்பட்ட பெயர் முஷ்ரிக் என்பதே என்ற உண்மையும் தெளிவாகி விட்டது–

எனவே "இபாதத்தில் (வணக்கத்தில்) ஒருமைப்படுத்தல்" எனும் கருத்தும் இதனை அடிப்படையாகக் கொண்ட கொள்கையும் சுத்த ஷிர்க்கேயன்றி உண்மைத் தௌஹீத் அல்ல என்பது தெளிவாகி விட்டது–

## கற்பனைக் கருத்துக்களில் மூன்றாவது எக்காரியத்திலும் அல்லாஹ்வுடன் அவனல்லாததைக் கூட்டாக்காமலிருப்பது

இக்கூற்றையும் சிறிது நுட்பமாக ஆராயுமிடத்து இதுவும் பிழையான கற்பனை என்ற உண்மை நன்கு புலனாகும்–

இவர்களின் கூற்றுப்படி அல்லாஹ்வுடன் அவனல்லாததைக் கூட்டாக்குபவன்தான் முஷ்ரிக் ஆகிறான்–

ஆனால் அல்லாஹ்வான மவ்ஜூதுடன் அவனல்லாத சர்வபிரபஞ்சங்களும், சர்வ சிருஷ்டிகளும் அல்லாஹ்வின் வேறான மௌஜூதுகளும் "உண்டு" என்று இரு மௌஜூதுக்களை உண்டாக்கிக் கொள்கிறான்–

இவ்வாறு இரு மௌஜூதுகளை உண்டாக்கிக் கொள்வதும், அல்லாஹ்வான மௌஜூதுடன் அவனல்லாததாகக் கருதப்படும் மௌஜூதும் இணையாய் உண்டு என்று கருதுவதால் இது

## "ஷிர்க்" இணை ஏற்படுத்துதல் என்றால் என்ன? அகில உலக மக்களிடமும் நான் சமர்ப்பிக்கும் சத்தியப் பிரகடனம்

நாம் ஒவ்வொருவரும் தன்னிறைவு பெற்றுச் சுபீட்சமாக வாழவே விரும்புகிறோம்– இந்த நோக்குக்காகவே ஒவ்வோர் கொள்கையை உருவாக்கிக் கொண்டு அல்லது பின்பற்றல் முறையில் எடுத்து செயல்படுகிறோம்–

தனிப்பட்ட மனிதன் மட்டுமல்ல, உலக அரசாங்கங்கள் கூட இதே நோக்கோடுதான் செயல்படுகின்றன–

ஆனால் நம்மில் எவராவது, அல்லது ஏதாவதோர் அரசாங்கம் தன்நிறைவு பெற்றதுண்டா? பெற முடியுமா? சிந்திக்க வேண்டிய ஓர் விஷயம்–

மனிதனுடைய தன்நிறைவு உடல், பொருள், அறிவு ஆகிய இம்மூன்றிலும் தங்கியிருக்கிறது–

அறிவு என்பது இல்லையானால் உடலும் பொருளுமிருந்தும் மனிதன் தன்நிறைவு பெற மாட்டான் என்பதை நீங்களறிவீர்கள்–

அறிவைப் பெற்றவன் அனைத்தையும் பெற்றான் என்பது ஓர் பழமொழி– ஆகவே நாம் தன்நிறைவு பெறுவதற்குரிய அறிவு எது என்பதைக் கண்டறிவது அவசியமாகிறது–

உலகமே நிலையானதென்று நம்பி அதற்குரிய அறிவை மட்டும் பெற்றுக் கொண்டு வாழ்ந்த மக்கள் தன்நிறைவு பெறாமல் ஏமாற்றமடைந்தே மரணித்தார்களென்பதை ஏறக்குறைய நாமெல்லோரும் அறிவோம்–

இதைப் போல உலகம் பொய்யானதென்று நம்பி, இல்லாத ஒன்றைத் தேடியலைந்து தன்நிறைவு பெறாமல் மறைந்தவர்களும் பலருண்டு–

இவ்விஷயத்தை எனது சிறு பராயத்திலிருந்தே மிகக் கடினமாய் ஆராய்ந்தேன்– என்னுடைய 35 வது வயதில் மனிதன் இலகுவாகவே தன்நிறைவு பெறக் கூடிய ஓர் வழி உண்டு என்பதையும், அந்த வழி, அறிவுத் துறையில் நிறைவு பெறாத ஒருசில மக்களால் நீண்ட காலத்துக்கு முன்பே மூடி மறைக்கப்பட்டு வந்திருக்கிறதென்பதையும் கண்டறிந்தேன்–

உலக மக்கள் பல பிரிவினராய்ப் பல மதத்தினராய்ப், பற்பல கொள்கையுடையவர்களாய் இருப்பினும் ஒன்றுக்கொன்று முரணான இரு கொள்கைகளின் அடிப்படையிலேயே வாழ்கிறார்,

இருப்பது தென்படுகிறது–

இவற்றைக் குர்ஆனைக் கொண்டே நோக்குவோம்– இந்த 6 காரணங்களில்–

1 வது– இலாஹுகளான பௌதீக சூட்சும சிருட்டிகளை வணங்குதல், விபரமாய்க் கூறினால் சிருட்டியைச் சிருட்டி வணங்குதல்–

2 வது– இலாஹுகளான சிருட்டிகள் உதவி செய்யும், அல்லது உதவி பெற உதவி செய்யும், அல்லது இறைவனை நெருங்கிச் சேர உதவி செய்யும் என்று நம்புவது–

3 வது– பௌதீக சூட்சும சிருட்டிகளுக்கு மட்டும் இலாஹு என்று பெயர் சூட்டுவது–

4 வது– இறைவனை உருவத்தில் (தஸ்பீஹில்) மட்டுப்படுத்துதல்–

5 வது– சிருட்டிகளான இலாஹுகள் லாபம், நஷ்டம், நன்மை, தீமை, சுகம், துக்கம் போன்ற குணங்களைக் கொடுக்கும் என்று நம்புவது–

6 வது– அல்லாஹ் ஓர் தனி வுஜூது (உண்மைப் பொருள்) என்றும் சிருட்டிகள் யாவும் அவனல்லாத தனித்தனி வுஜூதுகள் என்றும் நம்புவது–

இந்த ஆறு விஷயங்களும் தனித்தனியே ஷிர்க்காக இருக்கின்றனவா? அல்லது ஒரே விஷயத்தில் எல்லாம் கட்டுண்டிருக்கின்றனவா? என்பதை நாம் கண்டறிவது அவசியமாகிறது–

பொறுமையோடு சிந்தனைக்கெடுப்போம்–

## சிருஷ்டி சிருஷ்டியை பணிதல் ஷிர்க்காகுமா?

1 வது– விக்கிரக வணக்கம், அல்லது சிருட்டியைச் சிருட்டி வணங்கும் செயலைக் குர்ஆனைக் கொண்டு நோக்கினால் இச்செயல் ஷிர்க்குக்கு ஓர் கிளைக்காரணமேயன்றி முக்கியமான (ஆணிவேர்) காரணமல்ல என்று தென்படுகிறது–

அதாவது விக்கிரக வணக்கத்தை நீக்கிக் கொண்டால் நாம் ஷிர்க்கில் இருந்து விடுபட்டு விட்டோம் என்று கூற முடியாது–

ஏனென்றால் இச்செயல் வேறோர் மூலக் கொள்கையினால்தான் ஷிர்க்காக மாற்றமடைகிறது–

ஆகவே விக்கிரக வணக்கம்தான் ஷிர்க்கின் ஆணிவேர் என்று கூறமுடியாது– எப்படியென்றால்

**குர்ஆன் 2–34**

மலக்குகளை நோக்கி ஆதமுக்கு ஸுஜூது செய்யுங்கள் என்று கூறிய போது இப்லீஸைத் தவிர யாவரும் ஸுஜூது செய்தார்கள்–

என்று குர்ஆன் கூறுகிறது–

இப்றாஹீம் (அலை) விக்கிரகங்களை ஏன் உடைத்தெறிந்தார்கள்? றசூல் (ஸல்) மக்காவை வெற்றி கொண்டபோது கஃபாவுக்குள்ளிருந்த விக்கிரகங்களை அகற்றிய பிறகுதானே உள்ளே நுழைந்திருக்கிறார்கள். இது ஏன்? என்றெல்லாம் பல கேள்விகள் பிறக்கின்றன–

இந்தச் சந்தேகங்களை நீக்க வேண்டியது அவசியமே– விக்கிரக வணக்கத்தை நபிமார் தடை செய்ததற்குப் பல வெளிக் காரணங்களும் உட் காரணங்களும் இருக்கின்றன– அவற்றில் 1 வது காரணம்– (மிகச் சுருக்கமாய்த் தரப்படுகிறது)

அல்லாஹ், கடவுள், பிரமம் என்றெல்லாம் கூறப்படுகிற "வாஜிபுல் உஜூது" (உண்மைப் பொருள்) அழிந்தொழிய முடியாத ஆதாரப் பொருளாய் (குணியாய்) இருக்கிறது–

இலாஹு என்று குறிப்பிடப்படுகிற சிருட்டிகள் (இயங்குவன இயங்காதன) யாவும் பொருளல்லாத வெறும் நாமமும் தோற்றமும் கொண்ட ஆதேயங்களாய் இருக்கின்றன–

மனிதனின் புலனுட்சியின் மருட்சியினால் (ஹூறூரினால்) ஆதேயமான கற்பிதத்தை உண்மைப் பொருள் என்று காண்கிறான்– இருப்பது போல் தென்படும் சிருட்டி என்பது ஆதேயமாயும் அல்லாஹ் ஆதாரமாயும் இருக்கிறான்–

ஆதாரத்தை விட்டுவிட்டு ஆதேயத்தை வணங்குவது கூடாது–

2 வது காரணம்– உஜூது என்று கூறப்படுகிற அல்லாஹ் ஏகவியாபகமாய் அகண்டப் பொருளாய் இருக்கிறான்–

விக்கிரகமான சிருட்டி கண்டப் பொருளாய் நீளம், அகலம், கனம், நிறை, இடம், காலம், தோற்றம் முதலாந் கட்டுப்பாடுகளில் கட்டுண்டதாய் இருக்கிறது–

கண்டப் பொருளை வணங்கவே கூடாது– ஓர் சிருட்டியை வணங்குவதற்கெடுத்துக் கொண்டால் மற்றவையெல்லாம் வணக்கத்துக்குரியவையல்ல என்றாகும்–

எல்லாமே வணக்கத்துக்குரியவை தான் என்றெடுத்துக் கொண்டால் எல்லாவற்றையுமே வணங்க வேண்டியேற்படும்–

இது மனிதனால் முடியாத ஒன்றாகும்– மேலும் வியாபகமான அகண்டப் பொருளைக் கண்டப் பொருளில் மட்டுப்படுத்திய குற்றமும் ஏற்படும்–

சிருட்டியான விக்கிரகம் அல்லாஹுதான் என்று கொண்டால் இறைவனை (தஸ்பீஹில்) உருவத்தில் மட்டுப்படுத்தியது மட்டுமல்லாமல்

(5ஆந் பக்கம் பார்க்க) 7

# "தௌஹீத்"? "ஷிர்க்"? "குப்ரியத்"?

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலம், இடம் போன்ற கட்டுப்பாடுகளில் கட்டுப்படுத்திய குற்றமும் ஏற்படும்.

விக்கிரகம் அல்லாஹ் அல்லாதது என்றெடுத்துக் கொண்டால் ஷிர்க்கில் முற்றிலும் மூழ்க வேண்டியேற்படும்.

3 வது காரணம்— இன்ஸான் இறைவனின் பிரதிநிதியாய் இருக்கிறான்.

இறைவனை விடத் தாழ் பதவியிலுள்ளவை தான் சிருட்டியென்பது. ஆகவே உயர் பதவியிலுள்ள ஒருவன் தாழ்பதவியிலுள்ள ஒன்றை வணங்குவது நியாயமானதல்ல.

4 வது காரணம்— விக்கிரக தோற்றம் உள்ளத்தில் பதிந்து கொண்டால், தியானத்தின் போது வெளியாகக் கூடிய சில சூட்சும சிருட்டிகள் பதியப்பட்டிருந்த கற்பனைத் தோற்றங்களிலேயே வெளியாகலாம்.

இது உண்மையல்லாத பொய்க் காட்சியாகவே அமையும். மேலும் சாதாரண மனிதன் இலகுவாய் புரிந்து கொள்ள முடியாத சில நுண்விபரங்களும் இதில் மறைந்துள்ளன.

5 வது காரணம்— முன்கூறிய காரணங்களையெல்லாம் விட முக்கியமான காரணம், விக்கிரகமான இலாஹுவை வணங்குபவன் அதை அல்லாஹ் அல்லாததென்று நம்பி வணங்குவதே.

ஷிர்க்குக்குரிய முக்கிய காரணம் இது தான். விக்கிரகத்தை அல்லாஹ்வின் வேறல்ல என்று நம்பி வணங்கினால் அவன் காபிரேயன்றி முஷ்ரீக்கல்ல.

குபிர் மன்னிக்கப்படக் கூடிய குற்றம் தான் ஆனால் இலாஹு அல்லாஹ்வின் வேறானது என்ற நம்பிக்கையோடு அதை வணங்குவது ஷிர்க்காக இருக்கிறது. இதைப் பொறுமையோடு விளங்கித் தெளிவு பெற வேண்டும்.

குர்ஆன் 16—49

வானங்களில் இருப்பவர்களும் பூமியில் இருப்பவர்களும் அல்லாஹ்வுக்கே ஸுஜூது செய்து வணங்குகிறார்கள் —

இவ்வாயத்தில் வணங்கப்படுகிற அல்லாஹ்வை முற்படுத்தி "லில்லாஹி யஸ்ஜுது" என்று கூறியிருப்பது யார்யார் எதை எதை எப்படியெப்படி ஸுஜூது செய்தாலும் அது அல்லாவுக்கேயன்றி இல்லையென்பதைக் குர்ஆன் விளக்கம் தருகிறது.

மனிதர்களெல்லாம் எதையெதையோவெல்லாம் வணங்கிக் கொண்டிருக்கும் போதும் பூமியில் இருப்போரும் அல்லாஹ்வுக்கே ஸுஜூது செய்கிறார்களென்ற வசனம் எப்படிச் சரியாகும் என்பதைச் சிந்தனை செய்யுங்கள்.

அல்லாஹ் கூறுவதே உண்மையென்றால் வணங்குகிற வணங்கப்படுகிற அத்தனை சிருட்டி தான். சிருட்டியிடத்தில் வேறு காரணக் காரணமே இல்லை என்பதை முன்பே கூறியுள்ளேன்.

விளக்கமில்லாத மக்களின் கூற்றுப்படி அல்லாஹ்வுக்கு அன்னியமுண்டு என்று வைத்துக் கொண்டாலும் கூடச் சிருட்டியைச் சிருட்டி ஆதரவு வைப்பதில் எவ்வித தவறுமே கிடையாது.

நீதிமன்றத்தில் நாம் குற்றவாளி யென்றாகாமல் தப்பித் கொள்ள ஓர் சட்டத்தரணியில் ஆதரவு வைக்கிறோம்.

ஓர் மிருகத்தைச் சுட்டு வீழ்த்தத் துப்பாக்கியில் ஆதரவு வைக்கிறோம். விக்கிரக வணக்கவாளி விக்கிரகமான சிருட்டியில் ஆதரவு வைப்பது போலவே ஓர் முஸ்லிமும் இயங்குகிற, இயங்காத பொருட்களில் ஆதரவு வைக்கிறார்.

இவ்வகையில் முஸ்லிமுக்கும் முஷ்ரீக், அல்லது காபிருக்கும் பேதமே கிடையாது.

ஆதலால் இக்கொள்கை ஷிர்க்கிற்குரிய மூலகாரணமேயல்ல. இதிலிருந்து நீங்கி விட்டால் ஷிர்க்கிலிருந்து விடுபட்டு விட்டோம் என்று கூற முடியாது.

இது வேறோர் கொள்கையினால்தான் ஷிர்க்காக மாறுகிறது.

ஷிர்க்கிற்குரிய 3 வது காரணம்.

சிருட்டியான விக்கிரகங்களுக்கு இலாஹு (ஆலிஹத்) என்று பெயர் சூட்டுவது.

இக்கொள்கையை ஆராய்ந்தால் இதுவும் ஷிர்க்கிற்கு முக்கிய காரணமேயல்ல.

குர்ஆன் 4—171

அல்லாஹ் என்பதெல்லாம் ஒரே இலாஹு தான். குர்ஆன் 43—84

அவனே வானத்திலும் இலாஹாய்ப் பூமியிலும் இலாஹாய் இருக்கிறான். குர்ஆன் 27—64

அல்லாஹ்வுடன் வேறு இலாஹு இருக்கிறதா? நீங்கள் உண்மை சொல்பவர்களாய் இருந்தால் உங்களுடைய ஆதாரங்களைக் கொண்டு வாருங்களென்று நீர் கூறும்.

குர்ஆனில் இவ்விதமான சுமார் 150 ஆயத்துக்களில் இலாஹு என்ற சொல், விக்கிரகங்களான இலாஹுக்களுக்கும் அல்லாஹ்வான இலாஹுவுக்கும் பொதுப் பெயர்ச் சொல்லாககவே பாவிக்கப்பட்டிருக்கிறது.

இறைவனுக்கு மட்டுமே சொந்தமானதென்றில்லாத சாதாரண நாமங்களைச் சிருட்டியின் பேரில் கூறுவது ஷிர்க்கேயல்ல.

அது ஆகுமான காரியமதான் குர்ஆன் 22—65 ஆம் ஆயத்தில் றஊபுன் றஹீமுன் (இரக்கமும் கிருபையுமுள்ளவன்) என்று அல்லாஹ் தன் திருநாமங்களைக் கூறுகிறான்.

இதே திருநாமங்களைக் குர்ஆன் 9—128 ம் ஆயத்தில் றசூல் (ஸல்) அவர்களுக்கு றஊபுன ... களில் இவ்விபரம் தெளிவாய்க் கூறப்பட்டுள்ளது.

எஹூது நஸாராக்கள் இறைவனுக்கு மகன் உண்டு என்பவர்கள் உருவத்தில் இறைவனை மட்டுப்படுத்தியவர்கள்.

இப்படி இவர்களிலிருந்த கொண்டிருக்கும் போதும் இவர்களை இறைவன் குர்ஆனில் எவ்விடத்திலும் முஷ்ரிக்கீன்கள் என்று கூறவில்லை.

காபீர்கள் என்றுதான் கூறுகிறான். இதில் ஓர் நுட்பமுண்டு. காபீர்களான எஹூது நஸாராக்கள் அல்லாஹ்வை உருவத்தில் மட்டுப்படுத்தி வணங்கினார்கள்.

முஸ்லிமகளோ அரூபத்தில் மட்டுப்படுத்தி வணங்குகிறார்கள். அதாவது எஹூது நஸாராக்கள் "லாஹிறை" தோற்றுபவன் என்பதை எடுத்துக் கொண்டனர். முஸ்லிமகளோ "பாதினை" மறைந்தவன் எனபதை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்விரு கூட்டத்தினரும் ஈமானில் குறைவுடையோரேயன்றி இணை ஏற்படுத்துவோரல்ல.

ஆனால் உண்மையான ஓர் மூமீன் "லாஹிர்" "பாதின்" தோற்றம் மறைவு ஆகிய இரண்டையும் ஒப்புக் கொள்ள வேண்டியவராவார்.

குர்ஆன் 57—3

ஆதியும் அவனே, அந்தமும் அவனே. தோற்றுவதும் அவனே மறைந்திருப்பதும் அவனே சகலவற்றையும் அறிந்தவன் அவனே.

இறைவன் "பாதின்" அரூபி (உருவமில்லாதவன்) என்பது அவனுடைய குன்ஹு என்ற சுயதாத்தை, வுஜூதை நோக்கியது.

"லாஹிர்" ரூபி (தோற்றுபவன்) என்பது இறைவனின் அஸ்மாவிபத்துக்களை (நாமம், பண்பு) களை நோக்கியது. இதைப் பொறுமையோடு விளங்கித் தெளிவு பெற வேண்டும்.

ஷிர்க்கிற்குரிய 5 வது கொள்கை—

இலாஹுகளான சிருட்டிகள் இலாப நஷ்டம், நன்மை, தீமை, போன்றவற்றைத் தரும் என்று நம்புவது.

இதை ஆராய்வு செய்தால் இதுவும் ஷிர்க்கிற்குரிய ஓர் கிளைக்காரணமேயன்றி மூலகாரணமல்ல, எப்படியென்றால் அல்லாஹ்வின் வேறானதென்று நம்பும் சிருட்டிகள் குணம் கொடுப்பவைதான் என்று உலக மக்கள் யாவருமே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

நெருப்புச் சுடும், உணவு பசியைத் தீர்க்கும் மருந்து நோயைக் குணப்படுத்தும், சீனி இனிக்கும், வேம்பு கசக்கும் என்பதில் யாருக்குத்தான் சந்தேகம்?

மூமீனும் இதை நம்புகிறார். முஷ்ரீக்கும் இதை நம்புகிறான், குர்ஆனில் பல மருந்துகள் கூறப்பட்டுள்ளன. நபிமார் நோய்க்கு வைத்தியம் செய்திருக்கிறார்கள். மரணத்தைத் ...

இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட, நபிமாரால் விளக்கப்பட்ட சுத்த சத்தியமான தௌஹீதின் சாரம் என்னவென்றால், நிலையாய்த் தரிபாடாய் இருந்து கொண்டிருப்பவன் இறைவன் மட்டுமே.

அவனுடைய தாத்து, ஸிபாத்து, அஸ்மா (உஜூது அதன் குணம், அதன் நாமம்) தவிர அவனுடன் இணையாய்த் துணையாய் எதுவும் இல்லையென்பதே.

இதை உணர்த்துவததான் கலிமத்தத் தையிபா. "லா இலாஹ இல்லல்லாஹ்" அல்லாஹ் தவிர இலாஹு இல்லை என்பது அதன் அர்த்தம்.

கலிமாவில் பாவிக்கப்பட்டுள்ள இலாஹு என்பது அப்துவாகிய சிருட்டியையும் றப்புவான சிருட்டிகர்த்தாவையும் ஒன்றிணைத்துக் கூறப்பட்ட ஓர் பொதுப் பெயர்ச் சொல்லாகும்.

இதன்படி கலிமாவின் சாரம் அல்லாஹ்வையன்றி ஒன்றுமே இல்லையென்பதே.

அப்படியானால் இருப்பவை எல்லாம் எவை என்றோர் கேள்வி எழலாம். இருப்பவை சிருட்டிதான் வெளிப்பாடாய்த் தென்படுகிற இந்தச் சிருட்டி கண்டப் பொருளாய்த் தென்படுவது எமது புலனுட்சியில் கட்டுண்ட அறிவின் மயக்கமே.

இதை ஹூரூர் (மாய்கை) என்று குர்ஆன் விபரம் தருகிறது.

இந்தச் சிருட்டியின் தோற்றமதான் லாஹிர் என்பது. இந்த நாமமதான் மாய்கையினால் சிருட்டியாய்க் காட்சியளிக்கிறது.

பாதின் (மறைந்தவன்) என்ற நாமமதான் றப்புவாய் சிருட்டியின் அறிவில் எட்டாததாய் மறைந்ததாய் இருந்து கொண்டிருக்கிறது.

அல்லாஹ் என்ற வாஜிபல் உஜூது இருந்தபடியே இருந்து கொண்டு ஒவ்வோர் நிலைமையில் (மர்த்தபாவில்) ஒவ்வோர் வகையாய்த் தென்படுகிறது.

ஆகவே இருப்பது அவனும் அவன் குணமும் அவனுடைய நாமமுமேயன்றி வேறு எதுவும் அவனுடன் இணையாய்த் துணையாய் இல்லவே இல்லை.

இவ்விஷயத்தில் ஏற்படக் கூடிய சந்தேகங்களை நானே எடுத்துக்காட்டி அவற்றிற்குரிய ஆதாரத்தோடுள்ள விடைகளையும் "ஈமானின் உண்மையை நீ அறிவாயா" என்ற நூலில் தெளிவாய் விளக்கியுள்ளேன். அங்கு கண்டு தெளிக.

தௌஹீத் என்ற ஏகத்துவவாதத்தை விளங்கித் தெளிவு பெறுவது கடினம் என்பது உண்மை. இந்தக் கடினமான விஷயத்தை விளக்கித் தெளிவுபடுத்துவதற்காகத்தான் 1,24,000 நபிமார் தோன்றினார்கள்.

அந்த உணர்வு கனவில் வெளியான சிருட்டியுடையதாயில்லாமல் உள்ளத்துடைய உணர்வாகவே இருக்கும்.

விழிப்படைந்த போது நான் கண்டது கனவுதான் என்றுணர்வது மனமதான். கனவில் தென்பட்ட சிருட்டிகளால் இதைக் கனவென்று காண முடியாது.

இப்போது நோட்டமிட்டுப் பாருங்கள். கனவுக்கு முன்னும் கனவுக்குப் பின்னும் கனவின் போது தோற்றுவதாயும் தோற்றிய சிருட்டிக்கு மறைந்ததாயும் இருந்தது அந்த மனம் மட்டுமேதான்.

கனவில் வெளியான நல்ல, தீய பொருட்களுக்கெல்லாம் மூலாதாரமாய் அமைந்திருந்ததும் அந்த மனமேதான்.

இறுதியாய் மிஞ்சுவதும் அந்த மனம் மட்டுமதான். இந்த மனத்தில் தோன்றி மறைந்த யாவும் வெறும் கற்பனையான "பாதில்" தான். நாம் இப்போது கூறியது உதாரணமதான்.

இறைவனுக்கு எவ்வகையிலும் ஒப்புவமை காட்ட முடியாது. ஆகவே இவ்வுதாரணத்தில் சிற்சில வழுக்குகள் இருப்பினும் அவற்றைப் பொதுப்படையாய் வைத்துக் கொண்டு விஷயத்தை விளங்கியறிய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வுதாரணத்தில் பல அமஸங்களுண்டு.

1ஆவது— அரூபமாய், மறைவாய் இருந்த மனத்தில் உருவப் பொருட்கள் வெளியானது போல மறைந்ததாய் இருக்கிற றப்பிடத்தில் உருவப் பொருளான சர்வ (ஆலங்களும்) சிருட்டிகளும் வெளியாகியிருக்கின்றன என்பது தென்படுகிறது.

2வது:— மனத்தையன்றி வேறு இடம் காலம் இல்லாதிருந்த போது கனவு வெளியானதுபோல அல்லாஹ்வையன்றி ஒன்றுமில்லாதிருப்பதால் அவனில் (அவனுடைய அறிவில்) தான் அத்தனையும் வெளியாகியிருக்கின்றன.

3வது:— மனத்தில் மறைந்திருந்தவை குறிப்பிட்ட நேரத்தில் கனவாய் வெளியானதுபோல றப்பில் இயல்பாய் இருந்து கொண்டிருந்த யாவும் அரூபியமான போது வெளியாகின, வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இல்லாதது (உள்ளதாய்) இருப்பதாகாது என்ற தத்துவத்தின்படி வெளியான வெளியாகும் வெளியாக வேண்டிய யாவும் இறைவனுடைய அறிவில் உள்ளவைதான்.

4வது:— தோன்றிய கனவு மனத்தில் இருந்து வெளியாகி மீண்டும் இருந்த இடத்திற்கே சென்றுவிடுவது போல, இறைவனிடமுள்ளவை தோன்றி மறைந்து முன்நிலைக்கே சென்றடைகின்றன.

5வது:— கனவில் வெளியான பொருட்கள் மனத்தின் நாமமாய் இருந்து கனவின் போது ...

தான்- விக்கிரகத்தை அல்லாஹ்வின் வேறல்ல என்று நம்பி வணங்கினால் அவன் காபிரேயன்றி முஷ்ரிக்கல்ல-

குபிர் மன்னிக்கப்படக் கூடிய குற்றம் தான் ஆனால் இலாஹ் அல்லாஹ்வின் வேறானது என்ற நம்பிக்கையோடு அதை வணங்குவது ஷிர்க்காக இருக்கிறது- இதைப் பொறுமையோடு விளங்கித் தெளிவு பெற வேண்டும்-

குர்ஆன் 16-49

வானங்களில் இருப்பவர்களும் பூமியில் இருப்பவர்களும் அல்லாஹ்வுக்கே ஸுஜூது செய்து வணங்குகிறார்கள் -

இவ்வாயத்தில் வணங்கப்படுகிற அல்லாஹ்வை முற்படுத்தி "லில்லாஹி யஸ்ஜுது" என்று கூறியிருப்பது யார்யார் எதை எதை எப்படியெப்படி ஸுஜூது செய்தாலும் அது அல்லாஹ்வுக்கேயன்றி இல்லையென்பதைக் குர்ஆன் விளக்கம் தருகிறது-

மனிதர்களெல்லாம் எதையெதையோ வெல்லாம் வணங்கிக் கொண்டிருக்கும் போதும் பூமியில் இருப்போரும் அல்லாஹ்வுக்கே ஸுஜூது செய்கிறார்களென்ற வசனம் எப்படிச் சரியாகும் என்பதைச் சிந்தனை செய்யுங்கள்-

அல்லாஹ் கூறுவதே உண்மையென்றால் வணங்குகிற வணங்கப்படுகிற அத்தனை சிருட்டிகளும் அவனை விட்டும் வேறல்ல என்பதே உண்மையாகும்-

ஆனால் மனிதனோ தானும் தான் வணங்கும் இலாஹ்வான சிருட்டியும் அல்லாஹ்வை விட்டும் வேறானதென்ற நம்பிக்கையோடுதான் வணங்குகிறான்- குர்ஆன் 5-90

விசுவாசிகளே! நிச்சயமாகச் சாராயமும் சூதாட்டமும் விக்கிரக ஆராதனையும் அம்பெறிந்து குறி கேட்பதும் ஷைத்தானுடைய அருவருக்கத்தக்க வேலைகளிலுள்ளவையாகும்-

ஆகவே இவைகளிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்- நீங்கள் சித்தி பெறுவீர்கள்-

விக்கிரக ஆராதனை மதுவருந்துதல் போன்ற செயல்கள் ஒரே இனமானவை என்பதையும் ஷிர்க் என்பது இவற்றை விடக் கொடிய குற்றம் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்-

விக்கிரக ஆராதனையை நான் ஆமோதிப்பதாய்த் தவறாக விளங்கிக் கொள்ள வேண்டாம்-

ஷிர்க்கை விட விக்கிரக வணக்கம் இலகுவானது மன்னிக்கப்படக் கூடியது என்பதே நான் தரும் விளக்கம்-

பிறமதங்கள் எதிலுமே விக்கிரக வணக்கம் அனுமதிக்கப்படவில்லை- ஒரு சில மக்கள் பின்பற்றல் முறையிலேயே விக்கிரக வணக்கத்தை மதங்களில் இடைச்செருகலாகப் புகுத்தியிருக்கிறார்கள்-

ஆராய்ந்து பார்ப்பவர்கள் இதை அறிவார்கள்-

## "ஷிர்க்" இணை ஏற்படுத்துவதற்குரிய இரண்டாவது காரணம்

எங்களுடைய இலாஹுகள் ஸபாஅத் (சிபாரிசு) செய்யும், அல்லது உதவி செய்யும், அல்லது இறைவனை நெருங்கிச் சேர உதவி செய்யும் என்று நம்புவது-

இக்கொள்கையைச் சிந்தனைக்கெடுத்தால் இதுவும் ஓர் துணைக்காரணமே (பக்கவேர்) அல்லாமல் மூலகாரணமல்ல (ஆணி வேரல்ல) என்பது தென்படுகிறது-

எப்படியென்றால் அல்லாஹ் வேறு சிருட்டியான றசூல் வேறு என்று நம்பியிருக்கும் போது றசூல் (ஸல்) அவர்களிடம் ஸபாஅத்தின் ஆதரவு வைப்பது ஆகுமான காரியமுதான்-

அவர்களும் நம்மைப் போன்ற ஓர் சிருட்டி

இக்கொள்கையை ஆராய்ந்தால் இதுவும் ஷிர்க்கிற்கு முக்கிய காரணமேயல்ல-

குர்ஆன் 4-171

அல்லாஹ் என்பதெல்லாம் ஒரே இலாஹு தான்- குர்ஆன் 43-84

அவனே வானத்திலும் இலாஹாய்ப் பூமியிலும் இலாஹாய் இருக்கிறான்- குர்ஆன் 27-64

அல்லாஹ்வுடன் வேறு இலாஹு இருக்கிறதா? நீங்கள் உண்மை சொல்பவர்களாய் இருந்தால் உங்களுடைய ஆதாரங்களைக் கொண்டு வாருங்களென்று நீர் கூறும்-

குர்ஆனில் இவ்விதமான சுமார் 150 ஆயத்துக்களில் இலாஹு என்ற சொல், விக்கிரகங்களான இலாஹுக்களுக்கும் அல்லாஹ்வான இலாஹுவுக்கும் பொதுப் பெயர்ச் சொல்லாகவே பாவிக்கப்பட்டிருக்கிறது-

இறைவனுக்கு மட்டுமே சொந்தமானதென்றில்லாத சாதாரண நாமங்களைச் சிருட்டியின் பேரில் கூறுவது ஷிர்க்கேயல்ல-

அது ஆகுமான காரியமதான் குர்ஆன் 22-65 ஆம் ஆயத்தில் றஊபுன் றஹீமுன் (இரக்கமும் கிருபையுமுள்ளவன்) என்று அல்லாஹ் தன் திருநாமங்களைக் கூறுகிறான்-

இதே திருநாமங்களைக் குர்ஆன் 9-128 ம் ஆயத்தில் றசூல் (ஸல்) அவர்களுக்கு றஊபுன றஹீமுன் (இரக்கமும் கிருபையுமுள்ளவர்) என்று இறைவன் கூறியிருக்கிறான்-

இதேபோல இன்னும் சில திருநாமங்களைத் தனக்கும் சில நபிமாருக்கும் பொதுவாக இறைவன் குர்ஆனில் கூறியுள்ளான்-

விரிவைப் பயப்படுவதால் இங்கே தரவில்லை- குர்ஆனைக் கொண்டு காண்க-

ஆதலால் இக்கொள்கை ஷிர்க்கென்று கூற முடியாது- இது வேறோர் நம்பிக்கையினால் தான் ஷிர்க்காக மாற்றமடைகிறது-

## ஷிர்க்கிற்குரிய 4 வது கொள்கை

இறைவனை உருவம், நிறம், தோற்றங்களில் (ஸூறத்தில்) கட்டுண்டவன் என்று "தஸ்பீஹில்" மட்டுப்படுத்துதல்-

இக்கொள்கையை ஆராய்ந்தால் இதுவும் ஷிர்க்கென்ற இணையேற்படுத்தலுக்கு முக்கிய காரணமல்லவென்பதும் ஓர் கிளைக் காரணமே என்பதும் தென்படுகிறது-

ஏனென்றால் அஹ்லுல் கிதாபிகளான எஹூது நஸாராக்கள் இறைவனை "தஸ்பீஹில்" உருவப் பொருட்களில் மட்டுப்படுத்தியவர்கள்-

எஹூதுக்கள் உஸைறு (அலை) அவர்களை அல்லாஹ்வுடைய மகன் என்று கூறியவர்கள் நஸாராக்கள் ஈஸா (அலை) அவர்களை அல்லாஹ்வுடைய குமாரன் என்று கூறியவர்கள்-

குர்ஆன் 9-30 வது ஆயத்து இவ்விபரத்தை விளக்கம் தருகிறது-

இந்த எஹூது நஸாராக்களைக் குர்ஆன் ஹதீஸுகளில் எவ்விடத்திலுமே முஷ்ரிக்கீன்கள் என்று கூறப்படவே இல்லை-

இவர்களைக் காபிர்கள் என்றுதான் இறைவன் கூறுகிறான்-

ஷிர்க்கென்ற இணையேற்படுத்தலுக்கும் குபிருக்குமிடையில் வேறுபாடுண்டு-

குபிர் அல்லாஹ் நாடினால் மன்னிக்கப்படக் கூடியது- ஷிர்க் மன்னிக்கப்பட முடியாதது-

காபிர்களான எஹூது நஸாராக்களின் உணவு பெண்கள் போன்றவைகளை இறைவன் மூமின்களுக்கு (ஹலால்) ஆகுமாக்கி வைத்திருக்கிறான்-

ஆனால் முஷ்ரிக்குகளின் உணவும் பெண்களும் மூமின்களுக்கு (ஹறாம்) விலக்கப்பட்டுள்ளது- குர்ஆனின் 2-221, 5-5 போன்ற ஆயத்துக்க

இறைவன் "பாதின்" அரூபி (உருவமில்லாதவன்) என்பது அவனுடைய குன்ஹு என்ற சுயதாத்தை, வுஜூதை நோக்கியது-

"லாஹிர்" ரூபி (தோற்றுபவன்) என்பது இறைவனின் அஸ்மாஸிபத்துக்களை (நாமம், பண்பு) களை நோக்கியது- இதைப் பொறுமையோடு விளங்கித் தெளிவு பெற வேண்டும்-

## ஷிர்க்கிற்குரிய 5 வது கொள்கை—

இலாஹுகளான சிருட்டிகள் இலாப நஷ்டம், நன்மை, தீமை, போன்றவற்றைத் தரும் என்று நம்புவது-

இதை ஆராய்வு செய்தால் இதுவும் ஷிர்க்கிற்குரிய ஓர் கிளைக்காரணமேயன்றி மூலகாரணமல்ல, எப்படியென்றால் அல்லாஹ்வின் வேறானதென்று நம்பும் சிருட்டிகள் குணம் கொடுப்பவைதான் என்று உலக மக்கள் யாவருமே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்-

நெருப்புச் சுடும், உணவு பசியைத் தீர்க்கும் மருந்து நோயைக் குணப்படுத்தும், சீனி இனிக்கும், வேம்பு கசக்கும் என்பதில் யாருக்குத்தான் சந்தேகம்?

மூமினும் இதை நம்புகிறார்- முஷ்ரிக்கும் இதை நம்புகிறான், குர்ஆனில் பல மருந்துகள் கூறப்பட்டுள்ளன. நபிமார் நோய்க்கு வைத்தியம் செய்திருக்கிறார்கள். மரணத்தைத் தவிர மற்றெல்லா நோய்க்கும் மருந்துண்டென்று றசூல் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

சிருட்டி குணம் கொடுக்கும் என்பதில் யாதோர் ஷிர்க்கும் ஏற்படாது. ஆயினும் அந்தச் சிருட்டியான இலாஹுகள் அல்லாஹ்வின் வேறானவையென்று நம்புவதால்தான் அது ஷிர்க்காக மாற்றமடைகிறது

## ஷிர்க்கின் 6 வது கொள்கை (ஆணிவேர்)—

அல்லாஹ் ஓர் தனி உஜூது (மூலப்பொருள்) என்றும், சிருட்டிகள் அவனல்லாத வெவ்வேறு தனித்தனி உஜூதுகள் என்றும் நம்புகிற கொள்கை.

விபரமாய்க் கூறினால் சர்வ ஆலங்களும் (சர்வ சிருட்டி உலகும்) அல்லாஹ்வின் வேறான தனி மூலப்பொருட்கள் என்று நம்பும் கொள்கை. குர்ஆன்ஹதீஸுகளின்படியும் தெளிந்த அறிவின்படியும் உண்மையான (ஷிர்க்) இணையேற்படுத்தல் என்பது இந்த வேறு பிரிக்கும் கொள்கைதான்.

நாம் முன்பு கூறிய 5 விஷயங்களையும் ஷிர்க்காக மாற்றிக் கொண்டிருப்பதும் இந்த வேறுபிரிக்கும் கொள்கைதான்.

அல்லாஹ்வுடன் அவனல்லாததும் உண்டென்றால் அவனுக்கு இணை, துணை, ஜோடி, சமம், நிகர், ஒப்பு, உவமை உண்டென்று ஏற்படும்? இதைத்தான் ஷிர்க் என்று கூறப்படுவது.

இது ஏற்படுவது உள்ளத்தில்தான். இந்த நம்பிக்கையுள்ள வரையிலும் பல்லாண்டு காலம் இபாதத்தில் ஈடுபட்டாலும் ஷிர்க்கிலிருந்து மனிதன் விடுபடவே முடியாது.

இந்த வேறு பிரிக்கும் ஷிர்க்கிற்கு எதிரானது தான் தௌஹீது என்பது இதன் சாரம் என்னவென்றால் அல்லாஹ் தனித்தவன். அவனுடன் அவனல்லாத எதுவுமே கிடையாதென்பதே. அல்லாஹ் தவிர இலாஹு இல்லையென்பதே இஸ்லாத்தின் அடிப்படையான கலிமத்துத்தையிபாவின் உண்மையான பொருளாகும்.

இதை விளங்கித் தெளிவுபெறும் விசுவாசமே ஈமான் என்பது. இஸ்லாத்தின் உயிர் இந்த நம்பிக்கைதான்.

குர்ஆன் 57: 3 ஆதியும் அவனே. அந்தமும் அவனே. தோற்றுவதும் அவனே. மறைந்திருப்பதும் அவனே. அவன் சகலவற்றையும் நன்கறிந்தோன்.

குர்ஆன் விபரம் தருகிறது.

இந்தச் சிருட்டியின் தோற்றமதான் லாஹிர் என்பது. இந்த நாமமதான் மாய்கையினால் சிருட்டியாய்க் காட்சியளிக்கிறது.

பாதின் (மறைந்தவன்) என்ற நாமமதான் றப்புவாய் சிருட்டியின் அறிவில் எட்டாததாய் மறைந்ததாய் இருந்து கொண்டிருக்கிறது.

அல்லாஹ் என்ற வாஜிபுல் உஜூது இருந்தபடியே இருந்து கொண்டு ஒவ்வோர் நிலைமையில் (மர்த்தபாவில்) ஒவ்வோர் வகையாய்த் தென்படுகிறது.

ஆகவே இருப்பது அவனும் அவன் குணமும் அவனுடைய நாமமுமேயன்றி வேறு எதுவும் அவனுடன் இணையாய்த் துணையாய் இல்லவே இல்லை.

இவ்விஷயத்தில் ஏற்படக் கூடிய சந்தேகங்களை நானே எடுத்துக்காட்டி அவற்றிற்குரிய ஆதாரத்தோடுள்ள விடைகளையும் "ஈமானின் உண்மையை நீ அறிவாயா" என்ற நூலில் தெளிவாய் விளக்கியுள்ளேன். அங்கு கண்டு தெளிக.

தௌஹீது என்ற ஏகத்துவவாதத்தை விளங்கித் தெளிவு பெறுவது கடினம் என்பது உண்மை. இந்தக் கடினமான விஷயத்தை விளக்கித் தெளிவுபடுத்துவதற்காகத்தான் 1,24,000 நபிமார் தோன்றினார்கள்.

பல இன்னல்களையும் துன்பங்களையும் அனுபவித்து அவைகளுக்கு மத்தியில் உண்மைத் தௌஹீதை நிலைநாட்டினார்கள்.

இன்றும் காலாகாலம் அந்த நபிமாரைப் பின்பற்றிச் செல்லும் அவ்லியாக்களை இதே வேலைக்காக அல்லாஹ் வெளியாக்கிக் கொண்டேயிருக்கிறான்.

இதை இலகுவாய் விளங்கக் கூடிய ஓர் உதாரணம் இங்கே தரப்படுகிறது.

மனிதனுடைய உள்ளம் (மனம்) என்பது புலன்களுக்கெட்டாத ஒன்றாய் இருக்கிறது. அப்படியிருந்தும் கனவின் போது புலன்களுக்கெட்டக் கூடிய சர்வ சிருட்டிகளும் அந்த மனத்தில் தென்படுகின்றன.

ஆனால் உள்ளம் கெட்டழிந்தோ விகாரப்பட்டோ கனவுக் காட்சியை உருவாக்கிக் கொள்வதில்லை.

அந்த உள்ளம் எம்மை விட்டுப் பிரிந்து வேறெங்கும் சென்று மறுமை என்ற காட்சியைக் காண்பதும் இல்லை.

புலன்களுக்கெட்டாமல் பரிசுத்தமாயிருந்த உள்ளம் தன் சுயநிலையில் இருந்து கொண்டே தன்னிடத்தில் மண் தண்ணீர் காற்று நெருப்பு போன்றவற்றால் உருவாக்கப்பட்ட சர்வ சிருட்டிகளையும் (சர்வ ஆலயங்களையும்) கண்டுகளிக்கிறது.

இக்காட்சி (மறுமை) வேறு எங்கிருந்தோ வந்து உள்ளத்துக்குள் புகவுமில்லை.

புலன்களுக்கெட்டாத உள்ளம் என்றும் இருந்தபடியே இருந்து கொண்டு கனவில் வெளியான காலம் இடம் போன்றவற்றையும் அவற்றின் கட்டுப்பாட்டிலுள்ள நாய் பன்றி போன்ற பொருட்களையும் நஜீஸான பொருட்களையும் நல்ல பொருட்களையும் காணுகிறது.

ஆரம்பத்தில் (கனவுக்கு முன்) அந்த உள்ளமதான் நான் இருக்கிறேன் என்றுணர்ந்து கொண்டிருந்தது. அது ஒரேயோர் உணர்வுதான். ஆயினும் கனவின் போது தென்பட்ட சிருட்டிகள் யாவும் தங்களைத் தாங்களே தனித்தனியாய் நான் நான் என்ற தனித்தனியுணர்வோடுதான் எண்ணுகின்றன. கனவில் வெளியான ஒவ்வோர் சிருட்டியும் நான் கனவில் வெளியான கற்பனைத் தோற்றமே என்பதை உணர்வதே இல்லை.

அப்படி உணர்ந்து விட்டால் கனவு கலைந்து விடும்.

இருந்த மனத்தில் உருவப் பொருட்கள் வெளியானது போல மறைந்ததாய் இருக்கிறப்பிடத்தில் உருவப் பொருளான சர்வ (ஆலங்களும்) சிருட்டிகளும் வெளியாகியிருக்கின்றன என்பது தென்படுகிறது.

2வது:— மனத்தையன்றி வேறு இடம் காலம் இல்லாதிருந்த போது கனவு வெளியானதுபோல அல்லாஹ்வையன்றி ஒன்றுமில்லாதிருப்பதால் அவனில் (அவனுடைய அறிவில்) தான் அத்தனையும் வெளியாகியிருக்கின்றன.

3வது:— மனத்தில் மறைந்திருந்தவை குறிப்பிட்ட நேரத்தில் கனவாய் வெளியானதுபோல றப்பில் இயல்பாய் இருந்து கொண்டிருந்த யாவும் அவசியமான போது வெளியாகின. வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இல்லாதது (உள்ளதாய்) இருப்பதாகாது என்ற தத்துவத்தின்படி வெளியான வெளியாகும் வெளியாக வேண்டிய யாவும் இறைவனுடைய அறிவில் உள்ளவைதான்.

4வது:— தோன்றிய கனவு மனத்தில் இருந்து வெளியாகி மீண்டும் இருந்த இடத்திற்கே சென்றுவிடுவது போல, இறைவனிடமுள்ளவை தோன்றி மறைந்து முன்நிலைக்கே சென்றடைகின்றன.

5வது:— கனவில் வெளியான பொருட்கள் மனத்தின் நாமமாய் இருந்து கனவின் போது பொருட்களாய் காட்சியளித்தன.

இதைப் போலவே சர்வ ஆலங்களும் அவற்றிலுள்ள ஒவ்வோர் அணுவும் கூட அவனுடைய நாமங்களின் தோற்றமாகவே இருக்கின்றன.

6வது:— கனவு வெளியாவதற்கு முன்பும், கனவின் போதும் கனவு கலைந்த பின்பும் மனம் மாறுபடாமல் அழியாமல் நிலையாய் இருப்பது போல இறைவனும் சிருட்டிக்கு முன்பும் சிருட்டியின் போதும் சிருட்டி அழிந்த பின்பும் இருந்து கொண்டேயிருப்பான்.

7வது:— கனவில் வெளியான நல்ல தீய பொருட்களால் மனம் மாசுபடாமல் பரிசுத்தம் கெடாமல் இருந்தது போல இறைவனும் அவனில் வெளியான நல்ல, தீய பொருட்களால் எவ்வித மாசும் படாமல் (அசுசியாகாமல்) இருந்து கொண்டிருக்கிறான்.

8வது:— மனம் தனக்காகத் தன்னிடத்தே கனவை உருவாக்கியது போல இறைவன் அவனிடத்தே அவனுக்காக அவன் விரும்பியதை வெளியாக்குகிறான்.

9வது:— கனவின் போது "அதாலத்" என்ற நீதி நிர்வாகம் மனத்தில் நடைபெற்றது போல சர்வ உலகங்களிலும் இறைவன் அவனுடைய அதாலத்தென்ற நீதி நிர்வாகத்தை நடாத்திக் கொண்டிருக்கிறான்.

இப்போது சுயசிந்தனையோடு அவதானித்துப் பாருங்கள். மனத்தையும் மனத்தில் வெளியான யாவற்றையும் ஒன்று சேர்த்து மனமேயன்றிக் கனவு இல்லையென்பதைப் போல அல்லாஹ்வையன்றி இலாஹு இல்லை (ஒன்றுமில்லை) என்று தான் கலிமா விபரம் தருகிறது.

இதை உறுதிப்படுத்துவதே குர்ஆனின் கடமையாய் இருக்கிறது.

இதற்குரிய இரண்டாவது ஆதாரம் ஹதீஸுகள்தான்.

அல்லாஹ்வையன்றி அவனுடன் எதுவுமே இல்லையென்ற இஸ்லாத்தின் சுத்த சத்தியமான தௌஹீதை மறுக்கக்கூடிய ஓர் வசனம் கூடக் குர்ஆன்ஹதீஸுகளில் கிடைக்கவே கிடையாது என்பதைப் பொறுமையுடன் விளங்கித் தெளிவு பெறவேண்டும்.

குர்ஆன் 27:64 அல்லாஹ்வுடன் வேறு இலாஹு இருக்கிறதா? (இல்லை) நீங்கள்

(6ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய பாஸ்போர்ட் பெற்ற தொழிலாளர் பற்றி விரைவில் பேச்சு

கொழும்பு மார்ச் 23

சிறிமா சாஸ்திரி சிறிமா இந்திரா ஒப்பந்தங்களின் கீழ் இந்தியா பாஸ்போர்ட் பெற்றிருக்கும் சுமார் ஒன்றரை லட்சம் தொழிலாளர்கள் சம்பந்தமாக இலங்கை - இந்திய அரசுகள் பேச்சு வார்த்தைகள் நடத்தும்.

தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவை 1983 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டிருப்பதால் இவர்கள் தாயகம் திரும்ப முடியாத நிலையில் இருக்கின்றனர்.

இவர்களின் நிலை குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவின் கவனத்திற்குக் கொண்டு வந்தது.

அவ்வேளையிலேயே இந்திய அரசுடன் பேசுவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார். அத்தோடு இ தொ காவையும் ஒன்றிணைத்து பேச்சு வார்த்தைகள் நடத்தவும் அவர் இணங்கினார்.

ஏற்கனவே 80 ஆயிரம் பேர் இந்தியப் பாஸ்போர்ட்டுகளுடன் இங்கிருக்கின்றனர். மேலும் 80 ஆயிரம் பேர் விண்ணப்பித்த நிலையில் இருக்கின்றனர்.

இவர்களில் பெரும்பாலானோர் இந்தியா திரும்ப விரும்பவில்லை.

தமிழ் நாட்டில் இலங்கையர் பலர் இன்னும் அகதிகளாக இருக்கின்றனர். இவர்கள் இந்திய பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்திருக்கின்றனர். இவர்களுக்கு இந்தியா பிரஜாவுரிமை வழங்குவதன் மூலமும்,

இந்தியா செல்ல விரும்பாமல் இலங்கையிலேயே தொடர்ந்து வாழ விரும்புவோருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவதன் மூலமும், ஒரு சுமுகமான முடிவைக் காணலாம் என இ தொ கா தலைவர் திரு எஸ் தொண்டமான் ஒரு ஆலோசனையை ஜனாதிபதி முன் சமர்ப்பித்திருக்கிறார்.

(ல-ந)

## சுங்க தீர்வையற்ற மோட்டார் சைக்கிள்கள்

பதுளை, மார்ச் 22

"கிராம சேவகர்கள் தமது கடமையை சரிவரச் செய்தால் அரசாங்கம் அவர்களுக்கு சுங்க தீர்வையற்ற மோட்டார் சைக்கிள்களை வழங்க ஏற்பாடு செய்யும்"


இவ்வாறு உள்ளூராட்சி ராஜாங்க அமைச்சர் திருமதி அமரா பியசீலி ரட்னாயக்கா கூறினார்.

பதுளை சைமன் பீரிஸ் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற கிராம சேவகர்கள் கூட்டத்தில் உரையாற்றும் போதே திருமதி ரட்நாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது—

இன்றைய அரசாங்கம் நாட்டை பொறுப்பேற்ற போது 4,000 கிராம சேவகர்களே இருந்தனர். ஆனால் இன்று 14,700 கிராம சேவகர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

(எ-037)



## தையல் இயந்திரம் அன்பளிப்பு

பாண்டிருப்பில் படுகொலை செய்யப்பட்ட அட்டாளைச்சேனையைச் சேர்ந்த முஸ்லிம் குடும்பங்களுக்கு பாமிஸ் இயக்கத்தினர் உதவிகளை நல்கி வருகின்றனர்.

அண்மையில் பாமிஸ் அகதிகள் நிவாரணக்குழு செயற்குழு உறுப்பினரும், அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான ஜனாப் எம் எம் ஹாசிம் குழுவினர் அக்கிராமத்துக்குச் சென்று படுகொலை செய்யப்பட்ட ஒரு பொலீஸ் உத்தியோகத்தரின் குடும்பத்துக்கு தையல் இயந்திரம் ஒன்றை வழங்கிக் கொண்டிருக்கையில் எடுக்கப்பட்ட படத்தை மேலே காண்க.

ஊர்ப்பிரமுகர்களும், அட்டாளைச்சேனை அடிப்படை முஸ்லிம் காங்கிரஸ் செயலாளருமான அல்ஹாஜ் எஸ் எம் ஏ காதரும் படத்தில் காணப்படுகின்றனர்.

[படம்- எம் ஏ பகுர்தீன்] (ஐ-035)

## றொனி டி மெல்: எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு மார்ச் 23

முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல்லுக்கு எதிரான வழக்கு மே மாதம் 25 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இவ்வழக்கு கடந்த செவ்வாயன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

